VASANTHAM Tamil Monthly 1 - 7 مجلة الربيع ملحق مجلة البشرى باللغة التاميلية




# வசந்தம்

மாத இதழ்

AR-RABAE

ஏப்ரல் ௨00௮ வாசிக்க மட்டுமல்ல... வாழ்க்கைக்கும்! April 2008



'இறைநம்பிக்கை கொண்டவர்களே!
தீயவன் ஒருவன் ஏதேனும் ஒரு செய்தி உங்களிடம் கொண்டு வந்தால், அதன் உண்மை நிலையை நன்கு விசாரித்து தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்! நீங்கள் தெரியாத்தனமாக ஏதேனும் ஒரு கூட்டத்துக்கு தீங்கிழைத்துவிட்டு பின்னர் உங்கள் செயலுக்காக வருந்தும் நிலை ஏற்பட்டு விடக்கூடாது.

- திருக் குர்ஆன் 49:6




IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية
رحمة للعالمين...
Extn: 208 2444117
www.ipc-kw.com

வசந்தம்
மாத இதழ்
AR-RABAE

வாசிக்க மட்டுமல்ல.. வாழ்க்கைக்கும்!



VASANTHAM - Ar-Rabae
Tamil Monthly
April 2008
ஏப்ரல் 2008
மலர் I இதழ் 7

**CHIEF PATRON**
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari

**EDITOR**
ஆசிரியர்
M.A. Abdul Musavir

**EDITORIAL BOARD**
N.M.M. Hussain Islahi
Ameer Hasan Nainar Madani
Faizal Muhammad Najahi
Muhammad Jabir Deeni
Moulavia Farzana Rafeeq

**DESIGN**
வண்ண உருவரைபடம்
Nader Bellal
IT Section-IPC

**PUBLISH**
வெளியீடு
ISLAM PRESENTATION COMMITTEE
KUWAIT

**CONTACTS**
தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT

**DIAL**
2444116, 2444117 Extn: 208

**FAX**
2400057
Attn: IPC—VASANTHAM

**e-MAIL**
amusavir@gmail.com

**WEBSITE**
www.ipc-kw.com

# இந்த இதழில்..!

2 வாசகர் வசந்தம் — வரலாற்றுக் கவிஞர்

3 ஆசிரியரிடமிருந்து — முட்டாள் பொய்யர்கள்!

4 ஆய்வு — யூத-கிறித்துவ மதங்களின் நகலா இஸ்லாம்?

5 சிறப்புக் கட்டுரை — எச்சரிக்க வந்த ஏந்தல்!

9 பதிவுகள் — இஸ்லாத்தைத் தழுவிய தமிழ்-சிங்கள சகோதரிகளை கவுரவப்படுத்தும் விழா!

10 திருக்குர்ஆன் பக்கம் — அவர்கள் எதனைக் குறித்து வினவுகின்றார்கள்?

11 நபிமொழி பக்கம் — நபிகளார் வரைந்த கோடுகளில் மனித வாழ்வு!

12 வாழ்க்கை — நான் திருக் குர்ஆன் பேசுகின்றேன்!

13 வழிபாடு — இஸ்லாத்தில் இறைவழிபாடு!

15 முஸ்லிம் பெண் படித்தரங்கள் — அவள், தூதர் கட்டளையை தாங்கிப் பிடிப்பாள்!


16 மகளிர் நிலை — இஸ்லாத்தில் பெண்கள்!

18 பண்பு நலன் — ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்!

19 பேட்டி — Dr. ஜாகிர் நாயக்

20 கடைசிப் பக்கம் — நூலால் வந்தது...! சங்கிலியால் போனது..!!

6 இஸ்லாமும் சுற்றுச்சூழலும்!



முகப்புக் கட்டுரை

14 விட்டில் பூச்சியா வாழ்க்கை?



மகளிர் சிறப்பு குறுங்கதை

17 மகிமை பெற்ற மகளிர்



மகளிர் சிறப்புக் கட்டுரை

هل الإسلام مأخوذ من اليهودية والنصرانية ؟ ـ التحدي للإنسانية والبيئة ـ الإسلام والبيئة ـ أنشطة اللجنة ـ لماذا نؤمن بالبعث ـ الحياة الإنسانية في الإسلام ـ ماهو القرآن ـ العبادة في الإسلام ـ تعالوا لإنقاذ البشرية ـ المرأة على خطى الرسول صلى الله عليه وسلم ـ المرأة في الإسلام ـ المرأة متعة أم محترمة ـ أتدرون مالغيبة ـ لقاء مع الدكتور ذاكر نايك ـ لله ماأخذ ولله ما أعطى

# வரலாற்றுக் கவிஞர்...!




காதலர் அநாகரிக தினம்,
சாதீயக் கொடுமைகள்
நீங்க இஸ்லாம், என்னை
நீங்கள் நினைவுகூருங்கள்..
நான் உங்களை
நினைவுகூருகின்றேன் -
எல்லாதே என் கண்களை
குளிர வைத்தது, மனதை
நிறைவு செய்தது!
அனைவரையும்
நல்வழிப்படுத்தும் வசந்தம் ஓர்
சிப்பிக்குள் முத்து!

அபு மாஹின்
அம்பகரத்தூர்
சால்மியா - குவைத்

மு.அ. அப்துல் முஸவ்விர்
அவர்களின் "அறிவியலையே
அசர வைத்த அறிஞன்"
- தற்கால அறிவியல்
ஆராய்ச்சியாளர்களையும்
அசர வைத்த விளக்கம்.
இறைநிராகரிப்பாளர்கள்
இதனை உணர்ந்து
ஓரிறைக்கொள்கையை
ஏற்கவும், இவ்விபரம் தெரியாத
எண்ணற்ற முஸ்லிம்களும்
அறிந்துகொள்ளவும் கூடிய
விளக்கம் அது!
தொண்டுகள் தொடர
வாழ்த்துகின்றேன்!

ஜவஹர் அலி
பனைக்குளம் - இந்தியா
ஷர்க் - குவைத்



வசந்தம் இதழ் கண்டேன் அருமை! நல்ல விஷயங்கள்.
பணி தொடர வாழ்த்துக்கள்!

Dr. குமார் -
கடல் ஆய்வு விஞ்ஞானி
தமிழ்நாடு
ராபியா - குவைத்

கடைசிப்பக்க கவிதை அருமை! முன்னாள்
அரபு தீபகற்பத்தின் நிலைமையையும், காவியம்
படைத்த அண்ணலார் (ஸல்) அவர்களின் உன்னத
மேன்மையையும் இரத்தினச் சுருக்கமாக கவிதை
வரிகளில் படைத்தது வியக்க வைத்தது.
கட்டுரைத் தலைப்புக்கள் ஒவ்வொன்றும் அசத்தல்!
Dr. ஜாகிர் நாயக் அவர்களின் வரலாறு படைத்த நிகழ்ச்சி
தொகுத்து வழங்கப்பட்ட விதம் அருமை. அவருடைய
தொடரை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்!

முஹம்மத் ர.ஃபீக்
கள்ளக்குறிச்சி, தமிழகம்
ஸுஃப்ஹான் - குவைத்

அரேபிய நாயகம் அகிலத்துக் காவியம் - கவிதை ஒரு
வரலாற்றையே உள்ளங்கைக்குள் அடைத்துவிட்டது.
இத்தகைய அரிய முத்தாக கவிதை தீட்டி அண்ணல் (ஸல்)
அவர்களின் புகழை தமிழ் உலகம் கவிதை வடிவில் அறிய
செய்த கவிஞருக்கு வரலாற்றுக் கவிஞர் எனும் பட்டம்
வழங்கலாம்!

இ. அப்துர் ரஹ்மான்
சென்னை - இந்தியா
ஃபர்வானியா-குவைத்




குவைத் பற்றிய விவரங்கள்
ஆழ்கடலில் தோண்டி
எடுத்த நல்முத்துக்கள்.
புள்ளிவிவரங்கள்
அசத்தல்! நம்மை நாமே
கண்ணியப்படுத்திக் கொள்ள
கூறப்பட்ட விஷயங்கள் அருமை!
இஸ்லாம் பெண்களை
மட்டுப்படுத்தி வைக்கின்றது
எனும் எனது
தப்பபிப்ராயத்தைக் களைந்து
வருகின்றது, முஸ்லிம்
பெண்களின் படித்தரங்கள்
தொடர்!
காதலர் அநாகரிக தினம் பற்றிய
சாரம் ஒவ்வொரு சமூகமும்
உணர வேண்டிய ஒன்று.
இலங்கை பிரச்னை ஒரு நல்ல
தீர்வை அடையட்டும்!

இராஜ்குமார்
தஞ்சை, இந்தியா
ஹஸாவி - குவைத்

இஸ்லாத்தைப் பற்றி
விவேகானந்தர் போன்ற
அறிவுஜீவிகளின் எண்ணங்கள்
மேடையேறட்டும்.
அப்போதுதான், இஸ்லாத்தின்
உண்மை ஒளி உலகுக்கு தெரிய
வரும்!

இ. ஜுபைர் (பர்மா)
புதுச்சேரி - இந்தியா
ஸுலைபிய்யா-குவைத்



இந்த இதழின் வலப்பக்கங்களில் உள்ள
அல்லாமா இக்பாலின் கவிதை முத்துக்களைத்
தொகுத்தவர் சகோதரி ஸினூ.ஃபா அன்ஸார்!

வாசகர் வசந்தம் பகுதிக்கு வாசகர்களிடமிருந்து கடிதங்கள் வரவேற்கப்படுகின்றன.
வாசகர்கள் தங்கள் படைப்புக்களை முதல் பக்கத்தில் உள்ள வசந்தம் முகவரிக்கோ அல்லது
amusavir@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பலாம். வாசகர்கள்
தங்கள் மின்னஞ்சல் மற்றும் குவைத் முகவரி, தொலைபேசி எண் ஆகியவற்றையும்
குறிப்பிடுதல் நலம்!



# முட்டாள் பொய்யர்கள்!



இத்தகைய ஒரு சூழலை சிந்தித்துப் பாருங்கள்! மனம் இலயித்துப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள், உங்கள் அலுவலகத்தில்! ஒரு தொலைபேசி அழைப்பு...! உங்களுக்கு நெருக்கமான - வேண்டிய ஒருவர் அபாய கட்டத்தில் மருத்துவமனையில், அனுமதிக்கப்பட்டிருக்கிறார், என்று தகவல்! ஊங்களுக்குள்ளே பயங்கர அதிர்ச்சி...! நேற்று இரவுகூட நம்முடன் தொலைபேசியில் பேசினாரே! - வேறு சிந்தனை ஏதுமின்றி அலுவலகத்துக்கு விடுப்பு போட்டுவிட்டு, மருத்துவமனைக்கு விரைகிறீர். குறிப்பிட்ட இடத்துக்கு சென்றால், உங்களுக்கு வேண்டிய நண்பருடன் ஒரு கூட்டமே நின்றுகொண்டு "ஏப்ரல் ஃபூல் என்கிறது! உங்களுக்கு எப்படி இருக்கும்?

ஆனால், ஒவ்வோர் ஆண்டும் இந்த பொய் விளையாட்டு வாடிக்கையாகிவிட்டது. பொழுதுபோக்கு எனும் பெயரில், பொய், நயவஞ்சகம், முட்டாள்தனம் ஆகிய அனைத்தையும் கலந்து ஏப்ரல்-1 இல் வயது வித்தியாசமின்றி ஒவ்வொருவம் சிரமேற்கொண்டு செய்துகொண்டிருக்கிறார்கள். நகைச்சுவையாகக் கருதப்படுகிற இந்த ஆபத்தான அசிங்க பொய் வியைாட்டு பெரும்பாலானவர்களுக்கு கேட்டையும் துன்பத்தையும் விளைவித்துக் கொண்டிருக்கிறது.

பொதுமக்கள் மட்டுமல்ல, நல்லறிவு புகட்ட வேண்டிய பத்திரிகை உலகமும் வியாபார உத்திக்காக - போட்டிகளை சமாளிக்க வாசகர்களையும் முட்டாள்களாக்கி மகிழ்கின்றது. கடந்த ஆண்டு ஏப்ரல்-1 இல் குவைத்தின் பிரபல ஆங்கில நாளிதழ் ஒன்று, "குவைத்தில் இனி மது அனுமதிக்கப்படும் - என்று செய்தி வெளியிட்டது. பின்னர், கடைசிப் பக்கத்தில் "அது ஏப்ரல் ஃபூல் செய்தி - என்று அச்சிட்டு அனைவரையும் முட்டாளாக்கியது. பாருங்கள், மக்களுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய ஒன்றை - மக்களை முட்டாளாக்க அரசாங்க சட்டத்தையே நகைச்சுவையாக்கிவிட்ட கேலிக்கூத்தை!

ஏப்ரல் -1 இன் இத்தகு கேலிக்கூத்துக்குப் பின்னணி என்ன?

16-ஆம் நூற்றாண்டில் பிரான்சு மக்கள் வசந்த கால மாதமான மார்ச் 25-ஐ புத்தாண்டு தினமாகக் கொண்டாடி வந்தனர். அது ஏப்ரல் 1 வரை நீடித்தது. ஆனால், போப் கிரோகாரி-இன் முயற்சியால் 1564-ல் கிறித்துவ நாட்காட்டி மாற்றியமைக்கப்பட்டு ஜனவரி, 1 இனி புத்தாண்டாகக் கொண்டாடப்படும் என்று மன்னன் சார்லஸ் அறிவித்தான். ஆனாலும், பழமைவாத கிறித்துவர்கள் இதனை ஒப்புக்கொள்ளாது வழக்கம்போல மார்ச் 25 முதல் ஏப்ரல்-1 வரை புத்தாண்டு கொண்டாட்டங்களை கொண்டாடி வந்தனர். இதனால், அவர்களை முட்டாள்கள் என புதியவர்கள் வருணிக்க காலப்போக்கில் அது பொய், வஞ்சனை, ஏமாற்றுதலின் உருவமாக 'முட்டாள்கள் தினம் என்று மாறியது.

இத்தகையதொரு சமூகத் தீமையை அரசாங்கங்களளோ, ஏனைய மனித தர்மங்களோ அவ்வளவாகக் கண்டுகொள்வதில்லை! ஆனால், பாருங்கள்! இத்தகைய பொய் விளையாட்டைக்கூட மனித இன நயவஞ்சகத்தின் ஒரு கொடிய நச்சுப் பண்பாகக் காண்கிறது இஸ்லாம். இஸ்லாத்தின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'கேடு உண்டாகட்டும்! மக்களை சிரிக்க வைப்பதற்காகப் பேசவும் பொய்யுரைக்கவும் செய்கிற மனிதர் மீது!

அதுமட்டுமல்ல, இத்தகையதொரு பொய்ச்செய்தியைப் பரப்புவோர் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு இறுதி வேதம் திருக்குர்ஆன் கூறுகிறது!

'இறைநம்பிக்கை கொண்டவர்களே! தீயவன் ஒருவன் ஏதேனும் ஒரு செய்தி உங்களிடம் கொண்டு வந்தால், அதன் உண்மை நிலையை நன்கு விசாரித்து தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்! நீங்கள் தெரியாத்தனமாக ஏதேனும் ஒரு கூட்டத்துக்கு தீங்கிழைத்துவிட்டு பின்னர் உங்கள் செயலுக்காக வருந்தும் நிலை ஏற்பட்டு விடக்கூடாது.(49:6)

ஒருசில நிமிடத்துளிகள் மகிழ்ச்சிக்காகப் பிறரை ஒரு மாபெரும் அநீதிக்குள்ளாக்குகிறோம் என்கிற மனித உணர்வு இஞ்சிற்றும் இல்லாமல், வேடிக்கை விளையாட்டில் தம்மை இழக்கும் மக்கள் ஆர அமர யோசிக்கவேண்டும். இத்தகைய பெருமதியில்லாத அமசங்களில் தமது சிந்தனைகளையும் நேரத்தையும் வீணாக்காமல், ஆக்கபூர்வ விஷயங்களுக்காக அவற்றை செலவிட முயற்சிக்க வேண்டும். அதற்குரிய அடிப்படை தேவை, இறைநினைவு நிறைந்த எண்ணப்போக்கு, சிந்தனைத் திறன்! அவற்றை எம்மில் வளர்க்கும், வழிவகைகளை ஆராய்ந்து ஏற்றுக்கொள்வதில் எவ்வித தயக்கமும் காட்டக்கூடாது!.


ஆசிரியர்
amusavir@gmail.com

அறிவைத் தேடி – ஒருவன் அலைகின்ற போது,
சுவனவழியை அவனுக்கு சுலபப்படுத்துவான்
இறைவன். -நபிமொழி

# யூத-கிறித்துவத்தின் நகலா இஸ்லாம்?



எழுத்து



டாக்டர்
ஜமால் பதாவி

யூத-கிறித்துவ மூலாதாரங்களிலிருந்துதான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸலாத்தை உரவாக்கினார் எனக் கூறுபவர்கள் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவே இல்லை. என்ன அந்த வினாக்கள்?

-முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை பற்றி ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன எனினும், முஹம்மத் நபி (ஸல்) அவர்களைக் குறை கூறி விமர்சிக்கும்திறனாய்வாளர்கள் பலர், பல நூற்றாண்டுகள் விரிவாக ஆராய்ச்சி செய்தும் இஸ்லாம் மதத்தைத் தோற்றுவிக்கத் தேவைப்படும் அறிவை எந்தெந்த ஆசிரியரிடமிருந்து கற்றுக்கொண்டார் எனும் பெயர் பட்டியலை ஏன் கண்டுபிடித்துக் கூற இயலவில்லை?

-முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாமியக் கொள்கையைப் பிரச்சாரம் செய்தபோது,அவருக்கு எதிர்ப்புகள் நிறைய இருந்தன. அவர் எள்ளி நகையாடப்பட்டார். துன்புறுத்தப்பட்டார். இவ்வாறு ஒருநாள் இருநாள் அல்ல, 13 ஆண்டு காலம் தமது சமகால மக்களால் அவர்எச்சரிக்கப்பட்டார். எதிர்ப்புகள் இத்தனை கடுமையாகவும் விரிவாகவும் இருந்த போதிலும், அந்த எதிரிகள் இறைவனிடமிருந்து வந்த தூதை அண்ணலார்(ஸல்) அவர்களின் வாதம்தான் - அது ஒரு கட்டுக்கதைதான் என்று மக்களிடத்தில் ஏன் நிரூபிக்க இயலவில்லை? முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் அறிவுரைகள் மனிதர்கள் மூலம் அவர் பெற்ற அறிவால்தானே தவிர, இறையருளால் அல்ல என்று குற்றம் சுமத்துபவர்கள் அதனை அவருக்குக் கற்பித்த 'ஆசிரியர்' யார் என்று ஏன் அடையாளம் காட்ட இயலவில்லை?[1] முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் எதிரிகளில் சிலர் அவரை செப்பிடு வித்தைக்காரர், கெட்ட ஆவிகளுடன் அவருக்கிருந்த தொடர்பால்தான் இவ்வாறு பிதற்றுகிறார் என்று குற்றம் சுமத்திய பின்னர் தங்களது கருத்தை மாற்றிக் கொண்டனர். ஏன்?

-முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தம் இன மக்களிடையேதான் வாழ்ந்தார். அவருடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும்அம்மக்களுக்குத் திறந்த புத்தகமாகக் காட்சியளித்தது. குறிப்பாக பாலைவன மக்களின் தனிப்பண்பே சூது- வாதற்ற, ஒளிவு - மறைவு ஏதுமற்ற எதார்த்தம்தான்[2] முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் நெருங்கிய உறவினர்கள் உட்பட அவர் காலத்தில் வாழ்ந்த ஏராளமான அன்பர்கள் முஹம்மத் நபி (ஸல்)அவர்கள் போதிப்பது எல்லாம் வேறு யாரோ ஒரு ஆசானிடமிருந்து கற்றவைதான் அவர் தம்முடைய ஆசானுக்குப் பெருமை சேர்க்காமல், தாமே இறைவனிடமிருந்து இறை வசனங்கள் பெற்றதாகக் கூறி பெருமை சேர்த்துக் கொள்கிறாரே என்ற ஐயம் சிறிதளவாவது அவர் மீது ஏற்பட்டிருக்குமானால்,எப்படி அவருடைய நேர்மையை நம்பியிருக்கக் கூடும்?

- வரலாற்றின் போக்கையே மாற்றியமைத்த முழுமையான மார்க்கத்தை முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்குத்தந்த ஆசிரியர், தம்முடையதிறமைகள், சிறப்புகள் குறித்து ஏன் உரிமை கொண்டாடவில்லை? தம்மிடமிருந்து இஸ்லாமியக் கொள்கைகளை - கருத்துகளைத் தொடர்ந்து கற்ற பின்னர், தம்மை மதித்து பெருமைப்படுத்தாமல் புறக்கணித்த தமது மாணவரான முஹம்மத் நபி (ஸல்) அவர்களைக் குறை கூறி இதுவரை ஏன் எதுவும் பேசவில்லை?

-யூத குருமார்களிடமிருந்து அல்லது கிறித்துவ பாதிரியார்களிடமிருந்து முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கற்றிருந்தால், முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே வாழ்ந்த ஏராளமான யூத,கிறித்துவர்கள் எப்படி இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி முஸ்லிமானார்கள்? -முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு சில சமயம்மக்கள் முன்னிலையிலேயே திருக்குர்ஆன் வசனங்கள் வந்திறங்கின என்பது எல்லாரும் அறிந்த ஒன்று. திருக்குர்ஆன் 23 ஆண்டு காலத்தில், வெளிப்படுத்தப்பட்டது. முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு மெய்யுணர்வு கற்றுத் தந்த ஆசான் என்று கருதப்படுகின்ற அந்த மர்ம ஆசிரியர் இந்த 23 ஆண்டு காலம் எங்கு மறைந்திருந்தார்? அவரால் எப்படி இத்தனை ஆண்டு காலம் மறைந்திருக்க முடிந்தது? அல்லது எந்த நேரமும் தம் அருமைத் தோழர்களால் சூழப்பட்டிருந்த முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் இந்த 23 ஆண்டுகளில் ஒரு முறைகூட பிடிபடாமல் அந்த மர்ம ஆசிரியரை அடிக்கடி எப்படி சந்தித்து வந்தார்?

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், ஆக்ஸ்.'. போர்டு ஹார்வர்ட், மைக் கில் (McGill) போன்ற பல்கலைக் கழகங்களிலிருந்து ஆயிரக்கணக்கான முனைவர் பட்டங்களைப் பெற்ற திறமைமிகு இறையியல் வல்லுநராக இருந்திருந்தாலும்கூட மேற்சொன்ன பின்புலங்களின் மூலம் திருக்குர்ஆன் போன்ற ஒரு வேதம் தயாரானது என்பதை நம்ப இயலாது. ஆனால், முஹம்மத் நபி (ஸல்) அவர்களோ எழுதப்படிக்கத்தெரியாத ஒரு மனிதர் மார்க்கம் என்றால் என்னவென்றே தெரியாத காட்டரபிகள் நிறைந்த, பின்தங்கிய சமூகத்தில் பிறந்து வளர்ந்தவர் எனும் உண்மை மேற்கண்ட கூற்றை அபத்தமானது என்று நிரூபிக்கின்றது.

அடுத்த இதழில் முடியும்.. அல்லாஹ் நாடினால்

1. பார்க்க: ஜோமா பக்கம் 556 2. அண்ணலார் (ஸல்) அவர்கள் காலத்தில் வாழ்ந்த நிராகரிப்பாளர்களை நோக்கி திருக்குர்ஆன்.



# எச்சரிக்க வந்த ஏந்தல்

எழுத்து

என்.எம்.எம். ஹுஸைன்



ஒரு மண் துளியாக இருக்கும் வரை நீ வளர்ச்சி பெறாதவன்.பக்குவமாகாதவன்.உன் அகத்தை நீ வளர்த்தால் எதையும் சாடும் வாளாக நீ ஆகிவிடுவாய்!

எனவே,எந்த ஒரு சமூகமும் இறைத்தூதர்கள் அனுப்பப் படாமலும் இறை வழிகாட்டல் வழங்கப்படாமலும் விடப்படவில்லை எனும் கருத்தை இறைமறை மிகத் தெளிவாக சுட்டிக்காட்டுகிறது. இவ்வாறு எல்லா சமூகங் களுக்கும் இறைத் தூதர்கள் அனுப்பப்பட்டதற்கான நோக்கத்தைப் பற்றியும் இறைமறை திருக் குர்ஆன் பின்வருமாறு விவரிக்கிறது:

1. மனித சமூகத்துக்கு தன்னைப்படைத்த இறைவனை அறிமுகப்படுத்தி அவனுக்கு முற்றிலும் வழிபட்டு வாழுமாறு அழைப்பு விடுத்து உண்மையான படைப்பாளன் அல்லாது வணங்கப்படுகின்ற அனைத்தையும் விட்டு விலகிவிடுமாறு அறிவுறுத்துவதற்காக...

   "நாம் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு தூதரை அனுப்பினோம். மேலும், அல்லாஹ்வுக்கு அடிபணியுங்கள், தாகூத்துக்கு (அல்லாஹ் அல்லாது வணங்கப்படக் கூடிய அனைத்துக்கும்) அடிபணிவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்! என்று (அவரின் வாயிலாக அனைவரையும்) எச்சரித்தோம்..." (16:36) மற்றும் பார்க்க 21:25

2. இறைவழிகாட்டலின்பால் மனித சமூகத்துக்கு வழிகாட்டி மனிதனின் கண்ணியத்தைப் பாதுகாக்க, மற்றும் அந்த இறைச் சட்டங்களின் மூலம் மனித வாழ்வின் பிரச்னைகளை தீர்த்துவைப்பதற்காக...

   "(நபியே!) அல்லாஹ் உமக்கு அறிவித்துத் தந்த நேரிய வழியின்படி மக்களிடையே நீர் தீர்ப்பு வழங்க வேண்டும் என்பதற்காகவே உம்மீது இத்திருமறையை சத்தியத்துடன் நாம் இறைக்கி வைத்தோம்.... (4:105)

3. படைப்பாளனை மட்டும் இறைவனாக ஏற்று அவனுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு வாழக்கூடிய இறைநம்பிக்கையாளர்களுக்கு மறுமையில் தயார் செய்து வைக்கப்பட்டுள்ள சுவன இன்பங்கள் பற்றி எடுத்துக் கூற, இறைவனை நிராகரித்து இறைவழிகாட்டலைப் புறக்கணித்து வாழக்கூடியவர்களுக்கு மறுமையில் வழங்கப்படவிருக்கும் நரக வேதனையைக் கொண்டு எச்சரிக்கை செய்வதற்காக...

   "............இந் நிராகரிப்பாளர்களுக்கு இழிவுபடுத்தும் தண்டனையை நாம் தயார் செய்து வைத்திருக்கிறோம். (ஆனால்) எவர்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதர்கள் அனைவரையும் நம்பி தூதர்களுக்கிடையே வேற்றுமை பாராட்டவுமில்லையோ அவர்களுக்கு அவர்களின் கூலிகளை நிச்சயம் வழங்குவோம், அல்லாஹ் அதிக மன்னிப்பு வழங்குபவனும் கருணை நிறைந்தோனுமாய் இருக்கிறான்" (4 : 151-152)

4. மனிதர்களுக்கு நல்ல முன்னுதாரணமாய் வாழ்ந்து காட்டுவதற்காக..., இறை வணக்கத்தையும் மேலும் மனிதர்கள் அறியாதவற்றையும் கற்றுக் கொடுக்க மற்றும் சரியான பாதையில் நடப்பதற்கான பயிற்சியினை வழங்குவதற்காக...

   "உண்மை யாதெனில், உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி இருந்தது. உங்களில் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்புகின்றவராகவும், அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூருபவராகவும் இருக்கின்ற ஒவ்வொருவருக்கும்" (33:21)
   பார்க்க (2:151)

5

5. வாழ்க்கை பற்றிய கோட்பாட்டில் மயக்கங்கள், குழப்பங்கள், கருத்து முரண்பாடுகள் போன்றவற்றை விட்டும் பாதுகாத்து நேர்வழியின்பால் மனித சமூகத்தை வழிநடத்திச் செல்வதற்காக :

   "இவர்கள் எவற்றில் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்களோ அவற்றின் உண்மை நிலையை இவர்களுக்கு நீர் தெளிவாக்கிட வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வேதத்தை உம்மீது நாம் இறக்கியருளியிருக்கிறோம். மேலும், இவ்வேதம் தன்னை ஏற்றுக் கொள்கின்ற மக்களுக்கு வழிகாட்டியாகவும் அருளாகவும் இருக்கின்றது" (16:64)

6. மனித உள்ளங்களை மாசுமருக்களிலிருந்து தூய்மைப்படுத்தி தூய இறைநம்பிக்கையை அவற்றில் குடியமர்த்தி நற்கருமங்களின்பால் ஆர்வமூட்டி மனிதப்புனிதர்களாக வாழ்வதற்கான வழிகாட்டல்கள் வழங்குவதற்காக...

"அவன்தான் உம்மி (எழுதப் படிக்கத் தெரியாதவர்) களிடையே ஒரு தூதரை அவர்களிலிருந்தே தோற்றுவித்தான். அவர் எத்தகையவர் எனில், அவனுடைய வசனங்கயை அவர்களுக்கு ஓதிக்காட்டுகின்றார், அவர்களின் வாழ்க்கையைத் தூய்மைப்படுத்துகின்றார், மேலும், அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக் கொடுக்கிறார். ஆனால் அவர்களோ இதற்கு முன்பு வெளிப்படையான வழிகேட்டில் வீழ்ந்து கிடந்தார்கள். இன்னும் இவர்களுடன் வந்து சேராமலிருக்கும் ஏனைய மக்களுக்காகவும் இந்தத் தூதர் தோற்றுவிக்கப்பட்டுள்ளார்.அல்லாஹ் வல்லமை மிக்கவனாகவும் நுண்ணறிவுள்ளவனாகவும் இருக்கின்றான்" (62:02)

அடுத்த இதழில் முடியும்.. அல்லாஹ் நாடினால்...



# இஸ்லாமும் சுற்றுச்

எழுத்து
மு.அ. அப்துல் முஸவ்விர்

இன்றைய உலகத்தை பெரும் அபாயத்தில் ஆழ்த்தியிருக்கும் விஷயம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அம்சம். உலகியல் இச்சைகளில் மூழ்கியிருக்கும் மனிதன் இதுபற்றி அவ்வளவாக உணராதிருப்பது பெரும் வருத்தத்துக்கும் வேதனைக்கும் அபாயத்துக்கும் உரிய விஷயம்.

மேலும் இன்றைய பூமி பெரும் வெப்பமாதலை நோக்கி சென்று கொண்டிருப்பதாக வானிலை ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

1789-93 ஆண்டுகளில் ஏற்பட்ட எல்-நினோ எனும் வானிலை மாற்றம் காரணமாக ஐரோப்பாவில் கடும் வறட்சி தாண்டவமாடியது.

1982-இல் முன் அனுமானமற்ற நிலையில் இதே நினொ தாக்கம் கடும் பாதிப்பை உருவாக்கியது. இதனால் பசிபிக் கடலில் உள்ள கிறிஸ்துமஸ் திவில் கடல்நீர் மட்டம் உயர்ந்தது.

ஈகுவடார், வடக்கு பெரு ஆகியபகுதிகளில் கடும்மழை அதாவது, 6 மாதத்தில் 100 அங்குல அளவுக்கு மழை பெய்தது.

அமெரிக்காவின் தென்பகுதி கடுமையான புயலால் பலத்த சேதம் அடைந்தது.

அதேவேளை இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா ஆகிய நாட்களில் கடம் வறம்சி ஏற்பட்டது.

1997-98-ஆம் அண்டில் கடல் வெப்பம் மிக அதிகபட்சமாக 3 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர்ந்தது. அப்போதுதான் எல்-நினோ எனப்படும் வானிலை மாற்றம் பற்றிய தகவல் வெளிச்சத்துக்கு வந்தது.

குளோபல் வார்னிங் எனப்படும் உலக வெப்பமயம் ஆகுதல்தான் இதுபோன்ற வானிலை மாற்றத்துக்கு காரணமாக இருக்கலாம் எனும் கருத்தும் மிக பலமாக உருவாகி வருகின்றது.

சுற்றுச்சூழல் அம்சங்களில் ஏற்பட்டிருக்கும் இப்பயங்கர மாறுதலுக்கு, அதாவது-நிலத்தில் வறட்சி, கடலில் சூறாவளி, ஒரு பகுதியில் மட்டும் மழைநீர் கொட்டி தீர்ப்பது, அதிக சூடு, சுனாமி போன்ற பல்வேறு வகையான இயற்கை சீரழிவுகளுக்கு மனிதகுலம் பல்வேறு கவைக்குதவாத காரணங்களைக் கண்டுபிடித்தாலும் இயற்கையின் உன்னத சிறப்பை நமக்கு காட்டிய இறைநியதிப்படி நம் வாழ்க்கையை நாம் செலுத்திக் கொள்ளாததுதான் உண்மையான காரணம்!

சூழல் பற்றிய பேச்சு வந்தாலே நினைவுக்கு வருவது நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று ஆகிய இயற்கையின் ஐம்புலன்களே! இறைவன் தந்த இந்த மாபெரும் அருள்வளங்களைக் குறித்து மனிதனின் சிந்தனை ஆக்கபூர்வமான அணுகுமுறையைப் பேணுவதில் ஆர்வம் காட்டுவதில்லை. மாறாக, அவற்றை



# சூழல் பாதுகாப்பும்

மாசுப்படுத்துவதிலும், அழிப்பதிலுமே அறிந்தும் அறியாமலும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மனிதகுலத்துக்கு முழு வாழ்க்கைநெறியாக வந்த இஸ்லாம் சூழல் அம்சங்கள் குறித்தும் தன்புறத்து விளக்கங்களை முன்வைத்து மனிதகுல நலனுக்கு கட்டியம் கூறுகின்றது. இனி, இத்தகைய சூழல் அம்சங்கள் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் என்ன என்பதைக் காண்போம்

## நீர்

மூன்றாம் உலகப்போர் மூண்டால் நிச்சயம் அற்குரிய காரணம் நீர்வள அதாரங்களுக்காகத்தான் என போர் சூசகவியலாளர்கள் ஆரூடம் சொல்கின்றனர். அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நீர் தான் அனைத்துக்கும் மூலாதாரமானது என்று திருக் குர்ஆன் கூறுகின்றது.

ஒவ்வொரு உயிரினத்தையும் தண்ணீரிலிருந்து நாம் படைத்தோம். –திருக் குர்ஆன் 21:30

தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனித இனம் அனைத்தும் நீரைச் சார்ந்தே நிற்கின்றன. இவற்றின் வாழ்வு தழைக்கவும் தொடரவும் நீர் அத்திவசியமாகின்றது. (பார்க்க. திருக் குர்ஆன் 2:164, 6:99, 22:55) வாழ்வியலின் மிக உன்னத அருளாக இருக்கின்ற இந்த நிரின் மதிப்பை உணருமாறு இறைவன் நினைவுபடுத்துகின்றான். (பார்க்க. திருக் குர்ஆன் 25:48,49-56:68-70)

மேலும், அத்தியாவசிய தேவையான நீரை விண்விரயம் செய்யாது பயன்படுத்துவது என்பது அதனை நமக்கு அருள்பாலித்த இறைவனுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை என்றால் அது மிகையாகாது. இறைகடமையை செவ்வனே நிறைவேற்ற தூண்டுகோலாக இருக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பாதுகாப்பது, வீண் விரயம் செய்யாது இருப்பதும் அந்த கடமைக்குள் அடங்கியிருக்கின்றது. எந்த அம்சம் உங்களை விலக்கப்பட்ட ஒரு செயலின்பால் இட்டுச் செல்கின்றதோ அதுவும் விலக்கப்பட்டதுதான்.

நீரின் அத்தியாவசியத்தை திருக் குர்ஆன் நடுநிலையோடு பேசுகின்றது. அத்தியாவசியத் தேவையான தண்ணீரின் இயற்கை அமைப்பிலோ அல்லது தேவை அளவுகளிலோ ஏற்படும் குறைபாடு ஒட்டுமொத்த சூழல் அம்சத்தையும் நாசப்படுத்திவிடும் அபாயம் இருக்கின்றது.

## காற்று

உயிர் வாழ அத்தியாவசியத் தேவை காற்று. பெருகி வரும் தொழிற்சாலைகளின் காரணமாக நச்சுப்புகை, மனிதன் புகைப் பிடித்தலால் ஏற்படும் சூழல் மாசு இன்னபிற மாசுகாரணிகளால் காற்று வளிமண்டலம் மாசுபட்டு வருகின்றது. நீர் பெற அத்தியாவசியமான காற்றை அனுப்பும் இறைவனின் வல்லமையை பற்றி திருக் குர்ஆன் இவ்வாறு பேசுகின்றது:

மேலும் (மேகங்களை) கருக்கொள்ளச் செய்யும் காற்றை நாமே அனுப்புகின்றோம்.
–திருக் குர்ஆன் 25:48,49-56:68-70

*அன்பினால் ஆத்மா பலப்படுத்தப்பட்டதும் அது உலகை ஆளுவதாகி விடுகிறது!*

3 மில்லியன் மக்கள் காற்று மாசுபடுதலின் காரணமாக ஆண்டுதொறும் இறக்கின்றார்கள். இது ஆண்டு மரணங்களில் 5% ஆகும்.

30% முதல் 40% வரையிலான மக்கள் ஆஸ்துமா பொன்ற சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு காற்று மாசுபடுதலின் காரணமாக ஆளாக நேரிடுகின்றது. உலக சுகாதார அமைப்பு - WHO அறிக்கையின்படி, காற்று மாசுபடுதலின் காரணமாக 30% மரணங்கள் குறிப்பிட்ட காலத்துக்கு 15 வருடங்கள் முன்னரே நிகழ்ந்து விடுகின்றன.

இனி, பாருங்கள்! இறையருளுக்கு நாமே நமது கரங்களால் பாதகம் இழைத்துவிட்டு சூழல் காசுக்கு வேறு காரணங்களைத் தேடினால் என்ன பொருள்? மனித தேவைகளுக்காகாக பயன்படுத்தப்படும் குளிர்சாதன கருவிகளிலிருந்து வெளிப்படும் கார்பன் டெட்ரா குளோரைடு எனும் வேதியல் பொருள், இறைவன் இந்த வளிமண்டலத்துக்கு ஒரு பாதுகாப்பு அம்சமாக வைத்திருக்கின்ற ஓஸோன் கவசத்தில் ஓட்டையை ஏற்படுத்தி பெரும் வியாதிகளை உருவாக்குகின்றது.



நாமே நம் கரங்களால் அழிவைத் தேடிக்கொண்டு இயற்கையை நொந்துகொள்வதில் என்ன பயன்?

திண்ணமாக இந்த காற்றும் இறைவனின் சான்றுகளில் ஒன்றாக இருப்பதால், அதன் படைப்பு, வீச்சு, காலமாறுபாட்டுத் தன்மை ஆகிய அனைத்திலும் ஒரு திட்டவட்டமான செயல்பாடு இருக்கின்றது. இவ்வாறு இதனை வசப்படுத்தித் தரப்பட்டிருக்கின்ற இந்த இறையருளில் நாம் சுயம் நமது கரங்களால் ஏற்படுத்தும் மாறுபாடு இறையருளுக்கு செய்யும் மாறுபாடாகாதா, என்ன?

இதனையே திருக் குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

உங்களுக்கு ஏற்பட்டிருக்கம்
எந்தவொரு துன்பமானாலும்
அது உங்கள் கைகள்
சம்பாதித்தவைதான் - 42:30

## நிலம்

நாமும் நம்மை சார்ந்தோரும் இன்னபிற உயிரினங்களும் இந்த நிலத்தைத்தான் வசிப்பிடமாகக் கொண்டுள்ளோம். புகலில் நம் அன்றாட நிகழ்வுகள், இரவில் நிம்மதி என்று அனைத்து செயல்பாடுகளுக்காகவும் பூமியே அதாரமாக நிற்கின்றது. இதனையே திருக் குர்ஆனில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:

பூமியை அவன் எல்லாப்
படைப்புக்களுக்காகவும்
அமைத்தான் - 55:10

நம் இருப்பிட வசதிக்காக மட்டுமல்லாது, நமது உணவுக்குத் தேவையான தாவர மற்றும் ஆகுமான இன்னபிற விலங்கினங்களின் இருப்பிடமாகவும் உள்ளது.

இதேபோன்று பேரண்டம் முழுவதும் பரவியிருக்கின்ற அணு மதல் கோள் வரை அம்சங்கள் அனைத்தும் அதனைப் படைத்தவனுக்கு மறைந்து செயல்படவில்லை. அனைத்தும் மிகச் சிறந்த தரத்துடனும், தேவையான எண்ணிக்கையுடனும் படைக்கப்பட்டுள்ளன.

பேரண்டத்தில் எதுவொன்றும்
வீணாகப் படைக்கப்படவில்லை.
(பார்க்க. திருக் குர்ஆன் 44:38.39)

மனிதர்களாகிய நாம் பேரண்டத்தில் ஒரு பகுதியாவோம். மனிதனும் சுற்றுச் சூழல் சார்ந்த இந்தப் பேரண்டம் முழுவதும் தமக்கிடையிலான தொடர்புகள் குறித்து இறைவனால் அடையாளம் காட்டப்பட்டிருக்கின்றது.

பேரண்டத்துக்கும் அதில் அடங்கியுள்ளவற்றுக்கும் இடையிலான தொடர்பு.

வளர்ச்சி, பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் மனிதனின் தேவைக்கும் அவனுடைய நிறைவேற்றப்பட வேண்டிய விருப்பங்களுக்குமான தொடர்பு

மனிதனுக்கும்-இன்னபிற உயிரினங்களுக்கும் இடையிலான தொடர்பு.

இதனால்தான் இறைவன் மனிதனை இப்பூமியில் தனது கலீஃபாவாக – பிரதிநிதியாக பிரகடனப்படுத்தியிருக்கின்றான். தான் படைத்த இந்த பூமியை அவன் எவ்வாறு தான் காட்டிய பாதையில் நிர்வகிக்கின்றான் என்பதை அறிந்துகொள்வதற்காக! இதில் இரு மாபெரும் உண்மைகள் அடங்கியிருக்கின்றன

ஒன்று: படைத்தவன் ஒருவன் இருக்கின்றான், அவனுடைய வல்லமையில்தான் அனைத்தும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

மற்றொன்று, தன் மீது சுமத்தப்பட்டிருக்கின்ற பொறுப்புக்கு மனிதன் பதில் சொல்லியாக வேண்டும். அதற்கேற்ற வகையில் தனது பணிகளைச் செப்பனிட வேண்டும்.

இனி, பிரதிநிதி எனும் அந்தஸ்தில் பிற உயிரினங்களின் மீதான விஷயங்களில் மட்டுமே அல்லாது இறைவன் வழங்கியிருக்கின்ற - நமது கண்ணுக்கு தெரியாமல் அவனுக்கு அடிபணிந்து நமக்கு சேவகம் ஆற்றிக் கொண்டிருக்கும் சுற்றுச்சூழல் அம்சங்களையும் பாதுகாப்பது நமது கடமை!

# திருக் குர்ஆன் மனனப்போட்டி



IPC ரவ்தா கிளை – மகளிர் பிரிவில் சென்ற மாதம் முஸ்லிம்களுக்கும் புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டோருக்கும் திருக் குர்ஆன் போட்டி நடைபெற்றது. இப்போட்டி அழைப்புப் பிரிவுத் தலைவி இக்பாலுல் ஹஜ்ஜி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில் ஏறக்குறைய ஐம்பது பேர் கலந்து கொண்டனர். இறுதித் தீர்ப்புநாள் , நாயகம் (ஸல்) வர்களின் மனைவிமார்கள்(உம்மஹாதுல் மு∴மினீன்) , இஸ்லாமியக்கோட்பாடு, போன்றவற்றில் முதல் மூன்று இடங்களையும் சிங்களம் மொழி மூலப் பயிற்சி நெறி மாணவிகள் பெற்றனர். வெற்றி பெற்றோருக்கான பரிசுகளாக பணம் வழங்கப்பட்டது.

மேலும் ஹஸாவி விடுதி யிலுள்ள தமிழ் சகோதரிகளும் கலந்து கொண்டு வெற்றி பெற்று பணப்பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர். இப்போட்டியை ஒழுங்கமைத்து நடத்துவதில் அழைப்புப்பணிச் சகோதரிகள் ஷர∴புன் நிஸா ∴பாருக், ஆயிஷா ∴பாலிஹா, உமைரா நூருல் ஹம்ஸா, ஆகியோர் ஈடுபட்டனர். விழாவில் ஸினூ∴பா அன்ஸார், ∴பர்ஸானா ர∴பீக், ஸுல்∴பிகா மன்ஸுர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

-ஸினூ∴பா அன்ஸார்

புனித இஸ்லாத்தை தமது ஈருலக வாழ்வுக்கான வெற்றிப் பாதையாக ஏற்று அதனைத் தமது மார்க்கமாகத் தேர்வு செய்த சகோதரிகளுள், தொழுகை, சுத்தம், இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடு (أركان الإيمان) ஆகிய ஆரம்பப் பாடங்களைக் கற்ற சகோதரிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி 26-3-2008 புதன் கிழமை சிறப்பாக நிறைவுற்றது. புகழனைத்தும் இறைவனுக்கே! இந்நிகழ்ச்சியில் தமிழ் மொழி பேசும் 17 சகோதரிகளும் சிங்கள மெழி பேசும் 15 சகோதரிகளும் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் சிறப்பு விருந்தினராக புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோருக்கான பிரிவின் தலைவி, ‘நஜாத் அத்தவீல்’ (உம்மு உஸாமா) கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதுடன், சகோதரிகளுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார்கள்.

மேலும், ‘கற்பதன் அவசியமும் அதற்கு அல்லாஹ்வின் சன்மானமும்’ என்ற தலைப்பில் சகோதரி ∴பர்ஸானா தமிழ் மொழியிலும் சகோதரி ∴பாலிஹா சிங்கள மொழியிலும் உரையாற்றினார்கள்.

விழாவில் மகளிர்ப்பிரிவைச் சேர்ந்த சகோதரிகள் ஸினூ∴பா அன்ஸார், ஸுல்∴பிகா மன்ஸுர் மற்றும் உமைரா நூருல் ஹம்ஸா ஆகியோர் கலந்துகொண்டனர்.

∴பர்ஸானா ர∴பீக்

# கவுரவ விழா







விழாவில் தமிழ் சகோதரிகளுடன் ∴பர்ஸானா ர∴பீக், (மேலே) மற்றும் சிங்கள சகோதரிகளுடன் ஸினூ∴பா அன்ஸார், ஸுல்∴பிகா மன்ஸுர் (இடது)

# அவர்கள் எதனைக் குறித்து வினவுகின்றார்கள்?

அத்தியாயம் 78
**அந்நபா**
வசனங்கள்

*சென்ற இதழ் தொடர்ச்சி*

உர்தூ மூலம்
*மௌலானா ஸையித் அபுல் அஃலா மௌதூதி*



தமிழாக்கம்
*மௌலவி அ.குத்புதீன் அஹ்மத் பாகவி*
*மௌலவி அ.அப்துர் ரவூஃப் பாகவி*

மக்காவில் அருளப்பட்டது வசனங்கள் : 40

அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும்
உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்....

1. இவர்கள் எதனைக் குறித்து வினவிக் கொள்கின்றார்கள்?
2. அந்த மாபெரும் செய்தியைக் குறித்தா?
3. அதைப்பற்றி இவர்கள் பல்வேறு முரண்பட்ட கருத்துகைளக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.1
4. ஒரு போதுமில்லை!2 வெகு விரைவில் அவர்களுக்குத் தெரிந்துவிடும்.
5. ஆம் ஒருபோதுமில்லை! வெகு விரைவில் அவர்களுக்கு தெரிந்துவிடும்.3

*அடிக்குறிப்புகள்*

*1.மறுமையைப் பற்றிய செய்திதான் இத்திருவசனத்தில் 'மாபெரும் செய்தி' என்று கூறப்படுகின்றது. அது குறித்து மக்காவாசிகள் உன்னிப்பாய் கவனித்து வந்தார்கள். ஒவ்வொரு அவையிலும், அதைப்பற்றி விதவிதமான சர்ச்சைகளும், கற்பனை வாதங்களும் செய்து கொண்டிருந்தார்கள்.*

*இதன் ஒரு பொருள், அவர்கள் அதைப் பற்றி பல்வேறு கற்பனை வாதங்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதாகும். மற்றொரு பொருள், 'உலகின் முடிவு காலம் பற்றி அவர்கள் தமக்கிடையே ஒருமித்த கொள்கையுடையவர்களாக இருக்கவில்லை. மாறாக அவர்களுக்கிடையே அதைப்பற்றி பல்வேறு கருத்துகள் நிலவி வந்தன'-என்பதாகும்.*

*அவற்றில் சில கிறிஸ்துவக் கருத்துகளிலிருந்து தாக்கம் பெற்று மரணத்துக்குப் பிறகு வாழ்வு உண்டு. ஆனால், அது உடல் ரீதியாக இருக்காது. வெறும், ஆத்ம ரீதியாக இருக்கும் என்று கூறினார்கள். சிலர் மறுமையை அறவே மறுக்கவில்லை ஆனால், அது நிகழுமா இல்லையா என்ற சந்தேகத்தில் இருந்தார்கள். சிலரோ, இந்தக் கருத்தே சரியில்லையென்று கூறிக் கொண்டிருந்தார்கள். இந்த இம்மை வாழ்வைத் தவிர வேறொன்றுமில்லை என்று கூறிக்கொண்டிருந்தார்கள்.*

*"வாழ்க்கை என்பது இவ்வுலக வாழ்க்கை மட்டும்தான். மேலும் நாம் இறந்த பிறகு ஒரு போதும் திரும்ப எழுப்பப்பட மாட்டோம்" என்று கூறி வந்தார்கள். (6:29)*

*சிலர் நாத்திகவாதிகளாக இருந்தார்கள். "வாழ்க்கை என்பது நம்முடைய இந்த உலக வாழ்க்கைதான். இங்குதான் நாம் மரணிக்கவும், உயிர் வாழவும் செய்கின்றோம். கால ஓட்டமன்றி வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை..(45:24)*


*இன்னும் சிலர் இது நடக்கக் கூடியது அல்ல என்று கருதி வந்தனர். "மக்கி போய்விட்ட இந்த எலும்புகளை உயிர்ப்பிப்பவர் யார்?"-என வினவிக்கொண்டிருந்தார்கள் (36:78)*

*இவை அவர்களுடைய பல்வேறு கருத்துகளின் சாரமாகும். அவர்களிடம் தெளிவான அறிவு எதுவும் இல்லை. மாறாக ஐயங்கள் ஊகங்களின் அடிப்படையில் அவர்கள் இவ்வாறு பல கருத்துகளைக் கூறி வந்தார்கள்.*

*2. அதாவது மறுமை பற்றி இவர்கள் தம்மிடையே கூறிக் கொண்டிருந்த அனைத்துக் கருத்துகளும் தவறானவை. அவர்கள் கருதியிருந்த எந்த ஒரு கருத்தும் சரியானதல்ல!*

*3. அதாவது அண்ணலார் அறிவித்துக் கொண்டிருந்த செய்திதான் முற்றிலும் சரியானது. ஊகத்தின் அடிப்படையில் அந்த மக்கள் பேசி வந்தது எல்லாம் அடிப்படையற்றவை.*

எழுத்து



*மௌலானா*
*ஸையித் அபுல் அஃலா*
*மௌதூதி*

*வசனங்கள் மற்றும் தெளிவுரை அடுத்த இதழிலும் தொடரும்*
*இறைவன் நாடினால்..!*

# நபிகளார் வரைந்த கோடுகளில் மனித வாழ்வு

நூல்

நபிகளார் வரைந்த கோடுகளில் மனித வாழ்வு



முஹம்மத் (ஸல்) அவர்கள் சதுரமாக கோடுகளை வரைந்து அதன் மத்தியில் வெளியே செல்லக் கூடியவாறு ஒரு கோட்டையும் வரைந்து மத்தியில் இருக்கக் கூடிய கோட்டை நோக்கி ஒரு பக்கத்திலிருந்து சிறிய சிறிய கோடுகளை வரைந்தார்கள். பின்னர் முழுக்கோடுகளும் அமைந்த தொகுதியை சுட்டிக்காட்டி, 'இதுதான் மனிதன்' என்று சொன்னார்கள். பின்னர் சதுரமாக வரைந்த கோடுகளைக் காட்டி, 'இதுதான் அவனைச் சூழ்ந்திருக்கும் வாழ்க்கைக்காலம் (அஜல்). வெளியே செல்லும் அந்தக் கோடுதான் அவனது ஆசைகளும், எதிர்பார்ப்புகளும், பக்கவாட்டிலிருந்து நடுப்பகுதியை நோக்கிச் செல்லும் இந்த சிறய கோடுகள்தாம் மனிதன் சந்திக்கின்ற நிகழ்ச்சிகளும் சம்பவங்களும். இவற்றுள் ஒன்று அவனை விட்டால் அடுத்தது அவனை பாதிக்கும்' என்றார்கள்."
(அறிவிப்பாளர்:இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் - ஆதாரம்:புகாரி)

இந்த நபிமொழியைப் பற்றிய ஒரு சுருக்கமான விளக்கத்தை முதலில் பார்ப்போம். மனித வாழ்வு பற்றிய பல உண்மைகள் இந்த நபிமொழியில் எடுத்துரைக்கப்படுகின்றன. மனித வாழ்க்கை வரையறுக்கப்பட்டது. ஆனால் மனிதனது ஆசைகள் வரையறுக்கப்பட்டவை அல்ல. இந்த ஆசைகளுக்கும் வாழ்க்கைக்கும் இடையில் அவனை வந்தடையக்கூடிய வாழ்க்கைச் சம்பவங்கள் ஒரு கணம் அவனுக்கு இலாபமாக இருந்தால் மறுகணம் அவனுக்கு நஷ்டத்தை தரக்கூடியதாகவும், ஒன்று மகிழ்ச்சியை தரக்கூடியதாக் இருந்தால் மற்றையது துன்பத்தை தரக்கூடியதாகவும் உள்ளது. இவ்வளவுதான் வாழ்க்கை என்பதே இந்த நபிமொழி கூறும் வாழ்க்கைத் தத்துவம்.

மனித வாழ்க்கை பற்றி ஒரு சுருக்கமான விளக்கத்தைத் தரும் முறையை நபி (ஸல்) அவர்கள் கச்சிதமாகப் பயன்படுத்தியுள்ளார்கள். வாழ்க்கை இவ்வுலகத்துடன் முடிந்துவிடுவதில்லை என்பது இஸ்லாத்தின் கோட்பாடு. ஆனால், உலகத்தில் இதுதான் வாழ்க்கை. வெளியே செல்லுகின்ற கோடு, மனித ஆசைகள் எல்லையில்லாமல் சென்று கொண்டிருப்பதைக் காட்டுகிறது. அதன் காரணமாக மனிதன் இந்த உலகத்தில் மூன்று பிரச்னைகளுக்கு மத்தியில் சிக்கிக் கொள்கிறான். அவன் அதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் முஹம்மத் (ஸல்) அவர்கள் இதனை விளக்கியதன் நோக்கமாக இருக்கலாம். ஒரு பக்கம் நிறைவு செய்ய முடியாத ஆசைகள், மறுபக்கம் வரையறுக்கப்பட்ட வாழ்க்கை, இன்னொரு திசையில் அவன் சந்திக்கக்கூடிய நிகழ்வுகள்! அவற்றுள் ஒன்று அவனுக்கு இலாபத்தை தந்தால் மற்றையது அவனுக்கு நஷ்டத்தைத் தருகிறது. ஒன்று அவனுக்கு மகிழ்ச்சியை தந்தால் மற்றையது அவனைத் துன்பத்தில் ஆழ்த்துகிறது.

இவ்வாறான ஒரு மும்முனைத் தாக்குதலுக்கு மத்தியிலேயே மனிதன் வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கிறது. இந்த உண்மையை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும். வாழ்க்கையின் ஒவ்வோர் அடியையும் மிகக் கவனமாக எடுத்து வைக்க வேண்டும். தவறினால் வாழ்வு நிலைகுலையத் துவங்கும் மனிதன் நிதானத்தை இழந்து விடுவான். பிறகு வாழ்க்கை வெள்ளத்தில் அடிபட்டுச் செல்லும் ஆபத்தை அவன் எதிர்கொள்ள நேரிடும். இந்த ஆபத்திலிருந்து மனிதன் தப்பிப் பிழைக்க ஒரு வழி இருக்கிறது. மறுமையைச் சென்றடையும் வரை மனிதன் தன்னுடைய அனைத்து ஆசைகளையும் நிறைவுசெய்து கொள்ள முடியாது என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அது! அப்போது நீண்டு செல்லக் கூடிய ஆசைகள் மட்டுப்படுத்தப்பட்டு விடும் மனிதன் கட்டுப்பாட்டோடு ஆசைகளை நிறைவு செய்து கொள்ளும் நிலையும் தோன்றி விடும்.

வாழ்க்கை பற்றிய இந்த உண்மையை நடைமுறைப்படுத்த மறுமை நம்பிக்கை அவசியமாகிறது. மனிதனது உள்ளத்தில் மறுமையானது ஆதிக்கம் செலுத்தவில்லையானால் அவன் வாழ்க்கையில் பல பிரச்னைகளுக்கும், நெருக்கடிகளுக்கும் ஆளாகி விடுகிறான்.

இரண்டாவது வழி, அவனைப் பாதிக்கும் வாழ்க்கை நிகழ்ச்சிகளை சரியான முறையில் எதிர்கொள்வதாகும். இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு நபிமொழியில் பின்வருமாறு சொன்னார்கள்:

ஒரு முஸ்லிமின் செயல்கள் அனைத்தும் ஆச்சரியமானவை. நிச்சயமாக அவனது அனைத்து விடயங்களும் அவனுக்கு நன்மையாகவே அமைகின்றன. அந்நிலை இறைநம்பிக்கையாளர்களைத் தவிர வேறு யாருக்கும் ஏற்படுவதில்லை. அவனுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்று நடந்து விட்டால் (அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துகிறான். அது அவனுக்கு நன்மையாக அமைந்துவிடுகிறது. அவனுக்கு தீங்கு ஏற்படும்போது பொறுமையாக இருக்கிறான். அதுவும் அவனுக்கு நன்மையாகவே அமைகிறது."(ஆதாரம்: முஸ்லிம்)

எழுத்து



ரஷீத்
ஹஜ்ஜுல் அக்பர்



# நான் திருக்குர்ஆன் பேசுகின்றேன்

எனது பெயர் திருக்குர்ஆன்!

எனக்கு வேறு சில பெயர்களும் உண்டு. வேதம், ஒளி, வழிகாட்டி, பிரித்தறிவிப்பது போன்ற பெயர்களும் வேறு பல பண்புப் பெயர்களும் உண்டு. எனினும் அதிகம் ஓதப்படக்கூடியது எனும் கருத்துடையதால் நான் திருக் குர்ஆன் என்றே அழைக்கப்படுகின்றேன்.

எனது வரலாறு ஏறக்குறைய 1400 வருடங்கள் பழமையானது. ஹிஜாஸ் எனும் அரபுப் பிரதேசத்து - இன்றைய ஸவூதி அரேபியாவில் அமைந்த மக்கமாநகரில் புகழ்பெற்று விளங்கியது குறைஷ் குலம்.

மக்காவின் சூழல் எப்படி இருந்தது தெரியுமா? படைத்த இறைவனை மறந்து சிலை வணக்கம், இறைவனுக்கு இணையாக இன்னபிற தெய்வங்கள், பெண் பிள்ளைகள் வாழ்வின் பாதகங்கள் என முடிவு செய்து அவர்களை உயிருடன் புதைத்தல், சூது, வாது, பித்தலாட்டம், மது, விபச்சாரம் என்று அனைத்துத் தீமைகளும் மலிந்திருந்த காலகட்டம்! இவற்றைக் கண்டு மனம் வெதும்பியவராய் உலகப் படைப்பு, அதன் நோக்கம் ஆகியவற்றின் இரகசியம் நாடி மக்காவிலிருந்து தொலைவில் அமைந்த ஹிரா எனும் மலைக்குகையில் சென்று இறைதியானத்தில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார், இதே குறைஷ் குலத்தை சார்ந்த முஹம்மத் (ஸல்) அவர்கள்!

அத்தகைய நிலையில் என்னுடைய ஆசிரியனாகிய வல்ல அல்லாஹ் வானவர் தலைவர் ஜிப்ரில் (அலை) அவர்கள் மூலமாக என்னை முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது இறக்கி வைத்தான். ஆவர் மீது இறங்கிய எனது ஆரம்ப வசனங்கள் முழு மனிதகுலத்தையும் முன்னிறுத்திப் பேசுகின்றன:- ஓதுவீராக! (நபியே!) படைத்த உம் இறைவனின் திருப்பெயர் கொண்டு! (உறைந்த) இரத்தக்கட்டியிலிருந்து மனிதனை அவன் படைத்தான். ஓதுவீராக! மேலும், உம் இறைவன் எத்தகைய மாபெரும் அருட்கொடையாளன் எனில் அவனே எழுதுகோலின் மூலம் கற்றுக்கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதிருந்தவற்றையெல்லாம் கற்றுக்கொடுத்தான்!" (96:1-5)

சந்திர கணக்கின்படி அப்போது முஹம்மத் (ஸல்) அவர்களின் வயது 40. அன்றைய தினமே அவர்கள் இறுதிநபித்துவ சிறப்புப் பட்டம் அருளப்பட்டவராக தேர்ந்தெடுக்கப்பட்டு என்னை உலக மக்கள் அனைவரிடமும் சென்று சேர்க்க வேண்டிய பெரும் பொறுப்பை ஏற்றார்கள். அன்று முதல் அன்னாருடைய வாழ்க்கையில் 23 ஆண்டுகள் வரை பல்வேறு காலகட்டங்களில் தேவைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் சூழல்களுக்கும் ஏற்றவாறு எனது நாயன் அல்லாஹ்வினால் இறக்கியருளப்பட்டேன்.

இந்நீண்ட காலத்தில் ஏறக்குறைய நான் பாதிக்கும் மேற்பட்ட பகுதி மக்காவிலும் மீதிப்பகுதி மதீனாவிலும் இறக்கியருளப்பட்டேன். நூன் ஒர நீண்ட கட்டுரைத்தொடராகவோ, ஒரே மூச்சில் கொணரப்பட்ட ஒரு நூலாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட கருத்துக்களின் தொகுப்பாகவோ அமைந்திடவில்லை. மாறாக, 114 அத்தியாயங்கள் கொண்ட 30 பாகங்களாகவும் ஒழுங்கை மக்கப்பட்டிருக்கின்றேன். எனது, அத்தியாயங்கள் ஒவ்வொன்றும் தனக்கென தனிப்பட்ட கருத்துக்கள், விவாதங்கள், வரலாற்றுப் பின்னணி ஆகியவற்றைக் கொண்ட ஒழுங்கமைப்போடு அமைந்தவை.

இப்போது உங்கள் மனத்தில் ஒரு வினா எழலாம். ஏழதப்படிக்கத் தெரியாத ஒருவர் மீது இறக்கியருளப்பட்ட நான் எழுத்து வடிவில் வந்தத எப்படி? முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது நான் அருளப்பட்டவுடன் அவர்கள் தமது தோழர்களுக்கு அதனை ஓதிக்காட்டினார்கள். எழதத் தெரிந்த தாழர்கள் அதனை எழுத்து வடிவில் கொண்டு வந்தார்கள். பின் அண்ணலார் (ஸல்) அவர்களிடம் ஓதிக்காட்டி சரிபார்த்துக் கொண்டார்கள். அதுமட்டுமல்ல, அண்ணலார் (ஸல்) அவர்களும் வருடந்தோறும் அதனை ஜிப்ரீல் (அலை) அவர்களுடன் சரிபார்த்து எனது ஆதாரத்தன்மையை ஐயத்துக்கிடமின்றி உறுதி செய்து கொண்டார்கள். இவ்வாறு உரதி செய்யப்பட்ட மாசுமரவற்ற ஒர மாபெரும் கருவூலமே நான்!

எனது தோற்ற வரலாறு இதுவே!

நான் அருளப்பட்டவுடன் முஹம்மத் (ஸல்) அவர்கள் தனது தூதத்துவப் பணியின் அடிப்படைக்கொள்கையை இவ்வாறு முன்வைத்தார்:-

வணக்கத்துக்குரிய இறைவன் அல்லாஹ் ஒரே ஒருவனைத் தவிர வேறெவரும் இல்லை, நான் (முஹம்மத் (ஸல்)) அல்லாஹ்வடைய (இறுதித்)தூதர் ஆவேன்! எனவே, மக்களே! அல்லாஹ்வை மட்டுமே வணங்குங்கள்! தமக்கும் நமக்கும் எவ்வித நன்மையோ தீமையோ செய்ய இயலாத சிலைகளை வணங்காதீர்கள்.

அவ்வளவுதான்!

நாளொரு கடவுளை சிலைகளாக வணங்கி வந்த அந்த சிலைவணக்க சமூகம் திடுக்கிட்டுப் போனது. இறைநிராகரிப்பு, இணைவைப்பு, கருத்து முரண்பாடான வாழ்க்கை வழிமுறைகள் என்று தாமே ஒரு வாழ்க்கைச் சுழல் வட்டத்தை அமைத்துக் கொண்டு அதிலேயே இலயித்துபந்து கேட்கப் பெற்றவுடன்..... என்ன நடந்தது?

...அடுத்த இதழில், இறைவன் நாடினால்!



எழுத்து



பைஸல் முஹம்மத்

# இஸ்லாம் கூறும் இறை வழிபாடு!

இஸ்லாத்தில் இறை வழிபாடு பலராலும் தவறாகவே புரிந்து கொள்ளப்பட்ட ஒரு அம்சமாகும். முஸ்லிம்களிடத்தில் பொதுவாக காணப்படுகின்ற தொழுகை, நோன்பு, தர்மம் செய்தல் போன்ற சடங்கு ரீதியான செயல்முறை வழிபாடுகளை நிறைவேற்றுவதே இறைவணக்கம் என்று பொதுவாக கருதப்படுகிறது. மாறாக இவையனைத்தும் இறை வழி பாட்டின் ஒரு சிறு பகுதியே. இறைவனின் விருப்பத்திற்கேற்ப அமையும் மனிதனின் சொல், செயல், அனைத்தும் இறை வழிபாடே. இந்த வட்டத்திற்குள் சட்டரீதியான வழிபாடுகளும், மற்றும் கோட்பாடுகளும்,சமூக நலப்பணிகள், மனித இனத்தின் நன்மைக்காக ஆற்றப்படும் சேவைகள் அனைத்துமே வழிபாட்டின் கருத்தோட்டத்தில் அடங்கும். இஸ்லாம் மனிதனை முழுமையான கண்ணோட்டத்தில் பார்க்கிறது. அதாவது அவன் முழுமையகாக அல்லாஹ்வுக்கு அடிபணிந்து வாழ வேண்டுமென அது கூறுகின்றது.

இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை நோக்கி திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது. நிச்சயமாக என்னுடைய தொழுகையும் என்னுடைய வழிபாடுகளும் என்னுடைய வாழ்வும் எனது மரணமும் அகிலங்களின் அதிபதியான அல்லாஹ்வுக்கே உரியது. அவனுக்கோ யாரும் இணையில்லை. இவ்வாறே எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. மேலும் நான் இறைவனுக்கு கீழ் படிவோரில் முதன்மையானவனாக உள்ளேன். (திருக்குர்ஆன் 6 : 162-163)

இந்த உலகத்தின் இயல்பான விளைவு என்னவென்றால் மனிதனின் ஒவ்வொரு செயலும், ஈடுபாடும் இறைவன் விரும்பியவாறே இருக்க வேண்டும். இறைவனுக்காக சமூகத்தில் கலந்துறவாடல், ஒற்றுமை உண்டாக்கல், இணக்கமாக நடந்துகொள்ளுதல் ஆகியவையும் இறை வழிபாட்டின் வட்டத்திற்குள் வந்து விடுகின்றன. தன் நன்பனை புன்முறுவலுடன் எதிர்கொள்வதும் தர்மமே. வாகனத்தில் ஒரு மனிதரை ஏற்றிவிட உதவுவதும் தர்மமே. ஒருவன் தனது கடமைகளை ஒழுங்காக செவ்வனே நிறைவேற்றுவதும் இறை வழிபாட்டின் ஓர் அம்சமே என்பதும் கவனிக்கத்தக்கது.

இன்னும் சொல்லப்போனால் மனைவியுடன் உறவு கொள்வதற்கும் வெகுமதி வழங்கப்படுகிறது என்று முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதிலிருந்து நேர்மையின் உறவுகளும் இறை வழிபாடே என்பது தெளிவாகும்.

இதன் அடிப்படையில் இஸ்லாத்தின் முக்கிய வணக்கங்களை சிலவற்றைப் பார்ப்போம்.



## தொழுகை (முழு உடம்பினாலும் வெளிப்படும் வணக்கம்)

வழி பாட்டுச் சடங்குகளில் தொழுகை முதன்மையானது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

1: இறை நம்பிக்கையாளனின் அடையாளமே தொழுகைதான்.

2: இது பாவங்களிலிருந்து மனிதனை தடுக்கிறது.

நாளொன்றுக்கு ஐந்து வேளை இறைவனுடன் தொடர்பு கொண்டு அவனது கட்டளைக்கு பணிந்து வாழ்வேன் என்று வாக்களித்து அவனின் வழிகாட்டுதலை விரும்பி வேண்டிப் பெறுவதால் மனிதன் பரிசுத்தமாகிவிட வாய்ப்பு ஏற்படுகிறது.

## ஜகாத் (பொருள்வழி வணக்கம்)

தொழுகையை அடுத்து ஸகாத் இஸ்லாத்தில் மற்றொரு முக்கிய தூண். நமது செல்வத்தில் ஏழைகளுக்கு ஒரு குறிப்பிட்ட பங்கை அளிப்பதுதான் ஸகாத் எனப்படும். திருக்குர்ஆனில் பல இடங்களில் தொழுகையும் ஜகாத்தும் இணைத்தே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தொழுகையைப் போன்றே ஸகாதும் இறை நம்பிக்கையின் செயல் வடிவம் ஆகும். இறைவனின் பிரதிநிதி எனும் நிலையில் அந்த ஏக இறைவனின் நோக்கத்திற்கேற்ப செலவழிக்க வேண்டும்! இதுவே சரியான வழி முறை.

## நோன்பு (உளத்தூய்மை)

இஸ்லாத்தின் மற்றொரு முக்கிய தூண் நோன்பு.: வணக்கங்களின் ஏனைய அம்சங்கள் மனிதனின் வெளிப்படையான உறுப்புகளை தூய்மைப்படுத்ததுகின்றன. அது போல் நோன்பு மனிதனின் அகத்தை தூய்மையாக்கும் கேடயமாகும். இத்தகைய தூய நிலையில் அவன் நல்லவற்றையும் நேர்மையினையும் அவன் கடைபிடிக்கிறான். தீயனவற்றையும் பொய்யையும் உதறித் தள்ளுகிறான்.

## ஹஜ் (தியாக வெளிப்பாடு)

தியாக உணர்வை வெளிப்படுத்தும் இறை நினைவு மாநாடே இறுதிக் கடமையான இந்த ஹஜ். இவ்வழிபாடு செல்வம், மற்றும் உடல் நலம் பெற்றுள்ளவர்கள் மீதே தம் ஆயுளில் ஒரு தடவை இது கடமை.

அது மட்டுமல்ல, முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள். சட்டத்திற்குட்பட்ட வகையில் நேர்மையான முறையில் பொருளீட்டி தன் குடும்பத்தாருக்காக செலவழிப்பாரேயானால் அதுவும் தர்மம் எனும் இறை வழிபாடே என்று வழிபாட்டின் எளிய நிலையை எடுத்துணர வேண்டும்.

மலையின் உச்சியிலே ஒரு கூடு கட்டு! வாழ்க்கைப் போராட்டத்திற்கு உன்னைப் பழக்கு! வாழ்க்கைத்தணலில் உடலையும் உள்ளத்தையும் வார்த்தெடுக்கப் பழகிக் கொள்!

எழுத்து



முஹம்மத் ஜாபிர்

குறுங்கதை

# விட்டில்பூச்சியா வாழ்க்கை?

மெல்லியலார்
மூலமே நாம்
உணர்ச்சியும்
செயலாற்றும்
திறமையும்
பெறுகிறோம்.
அவள், நம்
உள்ளமெனும்
வாவியில்
அலையும்குமிழியும்
நெளியும்
நீர்ப்பரப்பும்
எழுப்ப வல்லவள்

- மகாகவி இக்பால்

**வீ**தியோர மரங்களின் நிழல்களில் நடந்து கொண்டிருந்தாள் அவள். மெல்லிய குளிர் காற்றிலும் அவளுக்கு வியர்த்ததை நெற்றி வியர்வைத்துளிகள் காட்டின. கால்கள்தாம் முன்னே நடைபோட்டன. சிந்தனையோ பின்னோக்கி படம் காட்டிக் கொண்டிருந்தது.

சோகங்களை தனக்காகவும் சந்தோஷங்களை பெற்றவருக்காகவும் கொடுத்து திருமண வயதைத் திருடிக்கொண்டிருந்தது அவள் வாழ்வு. புத்தகங்கள் கைகளுக்குள் அமர்ந்திருக்க நடையில் வேகம் காட்டினாள்.

இஸ்லாமிய சூழலில்-இறைநெறி நந்தவனத்தில் தனது வாழ்க்கையை வரைய ஆசைப்பட்டாள். பூரண இஸ்லாமியவாதியுடன்- முற்றிலும் அடிபணிந்த முஸ்லிமுடன் இல்லறத்தில் இணைய நாட்டம் கொண்டாள்.

நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்...!

விதி வேறுவிதமாக இருந்தது. பாலூட்டி, சீராட்டி, பாராட்டி வளர்த்த பெற்றோரின் ஆசைக் கண்ணீர் அவர்கள் தேடிய மேற்கத்தியக் கணவரை அவளுடைய வாழ்க்கை நாயகனாக்கியது.

இஸ்லாமியப் பெண்ணாக இருந்து முற்றிலும் பணிந்த முஸ்லிம் மனைவியாக வாழ்ந்து அவருக்குக் கட்டுப்பட நினைத்தாள். ஆனால், அவரோ மேற்கத்திய நாகரிகத்திற்கும் சேர்த்து கட்டுப்படச்சொன்னார். திருக் குர்ஆனின் குளுமை நிழலிலும் நபிகளாரின் நல்வாழ்வு வரைந்த கோடுகளிலும் தனது வாழ்வோடு அவரது வாழ்வையும் சேர்த்து இஸ்லாமிய இன்பப் பயணம் செல்ல விழைந்த அவளது முயற்சிகள் கானல் நீராயின. அவளுடைய நியாயமான ஆலோசனைகள் அலட்சியப்படுத்தப்பட்டன. இருபுறத்து சமாதான அமர்வுகளும் நல்ல முடிவை - இஸ்லாமிய விருட்சத்தில் வளரக்கூடிய முடிவைத் தர முடியவில்லை.கண்ணீரில் கரைந்தாள்.

இறுதியில் இஸ்லாமிய வாழ்வில் இலட்சியத்தாகம் கொண்ட அவள் இல்லறத்தை இறைவனுக்காக இழப்பதில் இன்பங்காண்டாள். இனிதே வாகையும் சூடினாள்.

தான் விண்ணப்பித்த நிறுவனப் பெயர்ப்பலகை தென்பட்டவுடன் அவளுடைய சிந்தனை நிகழ்காலத்துக்குத் திரும்பியது. களைப்பு கலந்த உற்சாகத்துடன் உள்ளே நுழைந்து நிறைமனத்துடன் அவர்களுக்கு ஸலாம் கூறினாள். அவளின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தவர்கள் போல் அவர்களும் அழகிய வாழ்த்துக்களை அவளுக்குப் பதிலாகத் தந்தனர்.

ஆம்... அவர்கள்..!

அவளால் பயிற்றுவிடப்படப் போகும் நாளைய இஸ்லாமிய எழுச்சி மலர்கள்!

*இனி, யதார்த்த உலகுக்கு வருவோம்!*

*இன்றைய நவீன உலகம், மேலைநாட்டில் பணியாற்றி டாலர்களாக-தீனார்களாக-திர்ஹம்களாக-ரியால்களாக-பவுண்ட்களாக-இன்னபிற நாட்டு பணமதிப்புகளாக குவித்துக் கொண்டிருப்போரை தம் வீட்டு மாப்பிள்ளையாக்குவதில் பெரிதும் அக்கறை காட்டுகின்றது, அவர்தம் பெற்றோரும் அதற்கு விதிவிலக்கல்ல!*

*வாழ்க்கை ஒப்பந்த விஷயத்தில் வங்கி இருப்பைக் கவனிக்கும் சிலர், அவர்தம் சிந்தனை வங்கியில் தேங்கி நிற்கும் இறையச்ச இருப்பைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர். அல்லது கவனிப்பதில் அக்கறை காட்டுவதில்லை. இதனால் பலரின் வாழ்வு விளக்கொளியில் விழுந்த விட்டில் பூச்சிகளாகி விடுகின்றது.*

*வீட்டின் கூரைகள் சாரங்களால் தாங்கப்படுவது போல, ஒருவரின் வாழ்க்கை கூரை தாங்கப்படுவது சிறந்த கல்வி எனும் சாரத்தால்தான்! அதிலும் ஏக இறையச்ச இஸ்லாமிய வாழ்க்கை நெறிமுறை உணர்வை பிரதிபலிக்கும் அஸ்திவாரத்தின் மேல் அந்த சாரங்கள் நின்றிருந்தால் இந்த உலக வாழ்வும், மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்வும் அழகிய இல்லமாய் ஜொலிக்கும். இல்லையெனில் வாழ்க்கைப் பாதை திசைமாறுகின்றது. இறைவன் முன்னிலையில் தண்டிக்கப்படக்கூடிய துர்ப்பாக்கிய நிலையை அடைய நேரிடுகின்றது. பூகம்பத்தில் சிதிலமடைந்து நொறுங்கிய இல்லமாய் ஆகிவிடுகின்றது வாழ்வு! இத்தகைய வாழ்விலிருந்து நம்மைக் காப்போம்! தூய இறைநெறி வாழ்வைப் பேணுவோம்!*



எழுத்து



ஸினூஃபா அன்ஸார்

# அவள் தூதரின் கட்டளையை தாங்கிப்பிடிப்பாள்!

எழுத்து

ஸகீனா மணாளன்

*தெய்வீக நியதியைத் தன்னகத்தே கொண்டவளே! உன் பராமரிப்பு எங்கள் நடத்தையைச் சமைக்கிறது! அது எங்கள் சிந்தனையை பேச்சை செயல்களை உருவாக்கிறது! உன் உயிர்ப்பிலே தெய்வீகம் வீசுகிறது! நீயே சமுதாயச் செல்வத்தைப் பாதுகாப்பவள்!*

இயாலாமையின் இம்சை தந்த இக்கட்டான நிலைமையால் அணுவளவும் நேசிக்காத ஒருவனுக்கு மாலையிட்டுவிட்ட மங்கையின் வரலாற்றைக் காண்போம்!

இயலாமையின் எஃகுச் சுவர்கள் தகர்த்தெறியப்பட்ட பின்னர் மணவிஷயத்தில் அவளின் சிறகொடிக்கச் செய்யாமல் சுய முடிவு எடுக்கும் சுதந்திர பறவையாய் இஸ்லாம் அவளை முன்னிறுத்தியது.

இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்பகாலம்! உத்பா இப்னு அபூலஹப் உடைய அடிமைப் பெண் எத்தியோப்பியாவின் பரீரா என்பவள்! அடிமைத்தளையில் இருந்த வேளை மற்றொரு அடிமையான முகீத் என்பருக்கு வாழ்க்கை ஒப்பந்தம் செய்து வைக்கப்பட்டார். 'அடிமை' எனும் இயலாமை 'பரீரா'எனும் பறவையை கூண்டிலடைத்துவிட்டது.

அடிமை விலங்கை இஸ்லாம் அறுத்தெறிந்துகொண்டிருந்த காலகட்டம்! அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் பரீராவை தானே விலைக்கு வாங்கி விடுதலை செய்தார்கள். ஆம்! அடிமை விலங்குகள் அறுத்தெறியப்பட்டவுடன்,இயலாமைக் காலத்தில் தான் முகீத் உடன் செய்துகொண்ட வாழ்க்கை ஒப்பந்தத்தைக் குறித்து மறுபரிசீலனை செய்ய நாடி முகீத் வசம் விவாக விலக்கு கோரினார்.

அந்தோ, பரிதாபம்! தன் மனைவி மீது மாசற்ற அன்பும், காதலும் கொண்ட முகீத் அவளை நிரந்தரமாக பிரிய கிஞ்சிற்றும் இயலாதவராய் அவளிடம் கெஞ்சியவராய் பின்தொடர்ந்தார். அவள் மனத்தை மாற்ற! ஆனால், பரீராவிடம் முகீத்-இன் பகீரதப்பிரயத்தனம் முக்கியமாகப்படவில்லை. அவள் அவரைக் கண்டுகொள்ளவே இல்லை!

எல்லையற்ற காதலை – அன்பை தன் மனைவி மீது கொண்டிருக்கும் உண்மைப் பித்தனாகக் கணவன் ஒருபுறம்! அதே அளவான எதிர்மறை உணர்வை தன் கணவன் மீது கொண்ட மனைவி மறுபுறம்!

மனித உணர்வுகளின் உன்னத உதாரண புருஷனாக விளங்கும் அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு பரீரா – முகீத் விவகாரம் தெரிய வருகிறது. கணவனுக்கு எவ்வித உதவியும் செய்ய இயலாத நிலையில் பரீராவிடம் அவள் முகீத் வசம் திரும்பிப் போகாத காரணத்தை கேட்கிறார்!

நபித்தோழர் அபூஹுரைரா-வின் வார்த்தைகளில் நபிமொழி நூலான புகாரி இவ்விவகாரத்தை இவ்வாறு வருணிக்கிறது.

….. (அண்ணலார் (ஸல்) அவர்கள் பரீராவிடம்) 'நீர் ஏன் அவரிடம் திரும்பிப் போகக் கூடாது?" என்று கேட்க, பரீரா கூறினார்: "அல்லாஹ்வின் தூதரே! இவ்வாறு செய்யும்படி நீர் எனக்கு கட்டளையிடுகிறீரா….? அண்ணலார் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்: 'அவர் சார்பாக (சமாதானம் ஏற்படுத்த) இவ்விஷயத்தில் நானாகவே விருப்பம் காட்டினேன்!"

பரீரா பதிலளித்தார்: 'எனக்கு அவருடைய தேவை இல்லை!"

பாருங்கள்! இவ்விவகாரம் இரண்டு முக்கிய விஷயங்களை விவரித்துக் காட்டுகிறது.

சாத்வீக சாம்ராஜ்யன், சட்டக் காவலன் அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்கள் நினைத்திருந்தால் முகீத்-ன் பரிதாபத்துக்காக பரீராவுக்கு கட்டளை பிறப்பித்திருந்தால் எவரும் தவறு என்றே சொல்ல முடியாது. பரீராவுக்கு வேறு வாய்ப்பு இல்லை. ஆனால், தனது கட்டளை ஒரு பெண்ணின் நியாயமான அவா-வுக்கு மாற்றமாக இருக்கக் கூடும் என்பதால், முதலில் சமாதானத்துக்காக – ஒரு சமூக முடிவுக்காக தான் தலையிட்டதை அவருக்கு உணர்த்துகிறார். அதன் மூலம், கட்டாயத் திணித்தலுக்கு தான் முயற்சிக்கவில்லை என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

வாங்கிய கடனுக்கோ அல்லது என்றோ இயலாமையால் அஞ்ஞான கால வழக்கத்துக்கோ பகரமாக தம் புதல்வியரை அவர்தம் விருப்பம் இல்லாமலேயே திருமண பந்தத்துக்கு உள்ளாக்கும் பெற்றோர் இதிலிருந்து பாடம் பெற வேண்டும்.

மறுபுறம், தனது கணவன் சார்பாக நின்று சுமுகம் நாடும் இறைத்ததூதரின் கோரிக்கையைக் கேட்டு பரீரா 'அதெல்லாம் முடியாது, அவருடைய தேவை எனக்கில்லை, நான் எடுத்த முடிவு எடுத்ததுதான்' என்று முகத்திலடித்தாற்போல் கூறவில்லை. மாறாக, 'இது இறைத்தூதர் கட்டளையா?' என்று வினவுகிறார். காரணம், அவர்தம் வாழ்க்கை ஒப்பந்த விஷயத்தை விட – தனது அவாவை விட தூதரின் கட்டளையே பரீராவுக்கு முதல் வாய்ப்பாகப்பட்டது. அதனால் தான் இத்தகைய கேள்வி அவர் வாயிலிருந்து வந்தது. 'கட்டளை அல்ல அது' என்று தெரிய வந்தவுடன் தமது விருப்பத்துக்கு முன்னுரிமை தருகிறார்.



பாருங்கள்! இந்த முஸ்லிம் பெண்மணியின் இறையச்ச போற்றுதலை! ஆனால், இன்றைய நிலை என்ன? கட்டளைகளுக்கா முன்னுரிமை? மாறாக, கட்டுக்கட்டான பணத்துக்கே தன்னுரிமை!

பரீரா போன்ற பெண்மணிகள்தாம் வாழ்க்கை ஒப்பந்த விஷயத்திலும் ஓர் தெளிவான நடைமுறை உரிமையை நிலைநாட்ட முடிந்தது, தூதரின் கட்டளைக்குப் பின்னரே தமது முடிவுக்கு முன்னுரிமை தர முடிந்தது. இஸ்லாம் பலவந்தத்துக்கு பலம் சேர்ப்பது அல்ல, மாறாக, நியாயமான உரிமைக்கு உரம் சேர்ப்பது என்று முரசறிவித்து பறைசாற்ற செய்தது.

*ஆதாரம்: ஃபத்ஹ் - அல் - பாரி, 9-395, கிதாபுல்-அத்-தலாக், பாப் அல்குல் ஆங்கில - அரபி மூலம்*

■

# இஸ்லாத்தில் பெண்

இஸ்லாத்தில் பெண்களின் நிலை விவாதிக்கப்பட வேண்டிய ஒரு விஷயமாகவே நோக்கப்படுகின்றது. இஸ்லாத்தின் மீது காழ்ப்புணர்வு கொண்ட மேற்கத்திய நாட்டவரின் விஷ எண்ணங்களே இதற்குக் காரணம்.

இஸ்லாத்தில் பெண்கள் பெற்றிருக்கும் உரிமைகள் இறைக்கட்டளையின் விளைவே ஆகுமே அன்றி, தியாகங்களின் விளைவு அல்ல! தற்போதைய பெண்களின் சமூக அந்தஸ்து என்னவென்பதையும், உரிமையின் பெயரால் அவர்கள் எந்த அளவுக்கு அத்துமீறுகின்றார்கள், கடமையின் பெயரால் எத்தகைய கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்றார்கள் என்பது ஊரறிந்த இரகசியம்!

இறுதியில் அவளுடைய நியாயமான வாதங்களை அவர் ஏற்று செயல்பட்ட சம்பவத்தைக் கூறலாம்.

மேலும், அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்கள் காலத்திலும் பெண்கள் தமது சுதந்தரத்தை நியாயமான மறையில் பயன்படுத்திக் கொண்டார்கள். இக்கட்டான சில நேரங்களில், முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது மனைவியரின் நியாயமான ஆலோசனைகளுக்கு முன்னுரிமை தந்திருக்கின்றார்கள். மார்க்க விஷயங்களானாலும் சரி, உலக விஷயங்கள் அனாலும் சரி, பெண்களின் தமது ஐயங்களை தயக்கமின்றி முன்வைக்க சுதந்தரம் வழங்கப்பட்டிருந்தது.

தமக்கு விருப்பமானவரை



கல்வியையும் அறிவையும் தேடிப்பெறுவதில் ஆண்களிருக்கும் அத்தனை உரிமைகளும் பெண்களுக்கும் உண்டு அறிவைத் தேடிப் பெறுவது அவசியம் என்ற கூறிய இஸ்லாம், இதுவிஷயத்தில் வேறுபாடு காட்டவில்லை. ஆண்களைப் போலவே பெண்களுக்கும் கருத்துச் சுதந்தரம் உண்டு. பெண்கள் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமையுடையவர்களாய் இருந்தார்கள் என்பதை இஸ்லாமிய வரலாற்று ஏடுகள் நமக்கு உணர்த்துகின்றன. தமது கருத்தக்களை சுதந்தரமாக வெளிப்படுத்தினார்கள் என்பது மட்டுமல்ல, மகிச்சிக்கலான பிரச்னைகளின் போதும் கருத்துக்களை பரிமாறுவதில் குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றியுள்ளார்கள்.

இதற்கு உதாரணமாக உமர் இப்னு கத்தாப் (ரலி) அவர்களின் ஆட்சியின்போது அவரின் கருத்துக்கு மாற்றமாக ஒரு பெண் தனது சரியான கருத்துக்காக வாதிட்டு

வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக்கொள்ளவும், பலவந்தமான எந்தவொரு அம்சத்தை எதிர்க்கவும் அவர்களுக்கு பூரண உரிமை வழங்கப்பட்டிருந்தது.

வாழ்க்கை ஒப்பந்த விஷயத்தில் இன்று உலகம் முழுவதும் குறிப்பாக ஆசியப் பகுதிகளில் வியாபித்திருக்கும் (பெண் தான் மணமுடிக்கப் போகும் ஆணுக்கு தரும்) வரதட்சணை எனும் கொடுமையை ஒழித்து, மாறாக பெண்கள் தம்மை மணமுடிக்க நாடும் மணமகனிடமிருந்து குறிப்பிட்ட தொகையை அல்லது தேவையை நிர்ணயித்துப் பெற பெண்களுக்கு உரிமை வழங்கியது.

இதேபோல், இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியிருக்கும் இன்னும் பல உரிமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆவற்றை உலகம் ஒப்புக்கொண்டெ அக வேண்டிய நிலை ஏற்படப்போவது திண்ணம். ■

எழுத்து



அமீர் ஹஸன் நைனார்

## மகிமை

கொடுமைகளின் அட்சரத்தில் ஆழ்ந்து மூழ்கித் தடுமாறிக் கொண்டிருந்த காலத்தில்தான், முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், நீதியும் நேர்மையும் கொண்ட இறைத்தூதராக அனுப்பப்பட்டார்கள். பெண்களுக்கு உரிய உரிமைகளையும் கடமைகளையும் வகுத்துக் கூறி அவ்வினத்துக்கே பெருமை சேர்த்தார்கள்.

மகளிர் பிறப்ப எந்த வகையிலும் ஆடவர்க்கு சளைத்ததல்ல என்பதை நிரூபிக்கும் இறைவசனத்தை வலியுறுத்தினார்கள். "மனிதர்களே! உங்களை ஓர் ஆன்மாவிலிருந்து படைத்த உங்களின் இறைவனுக்கு நீங்கள் அஞ்சுங்கள், மேலும், அதே ஆன்மாவிலிருந்து அதனுடைய துணையை அவன் உண்டாக்கினான்!" (திருக் குர்ஆன் 4:1)

இதன் மூலம் ஆணும் பெண்ணும் ஒரே ஆன்மாவில் இருந்து படைக்கப்பட்ட சம அந்தஸ்தைப் பெற்றவர்கள் என்பதை எடுத்தியம்பி பிழையான எண்ணக் கருவைக் களைத்தெறிந்தார்கள். சமூகத்தில் பாதி பெண்களே எனும் வாய்மைக்கேற்ப பெண்களின் சரியான, உயரிய பங்களிப்புக்கள் இன்றி எமது சமூகம் பூரணத்துவம் அடைய முடியாது என்பதை அறுதியிட்டு கூறினார்கள். இதனைப் பின்வரும் இறைவாக்கின் மூலம் விளங்க வைத்தார்கள். "இறைநம்பிக்கை கொண்ட ஆண்கள், பெண்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஆதரவாளர்களாய் இருக்கின்றார்கள்" (திருக் குர்ஆன் 9:71)

பெண் குழந்தை பிறந்ததும் மகிழுமாறும் பரிவோடு அவளை வளர்த்தெடுக்குமாறும் கூறி அவளது வாழ்வுரிமையை



# பெற்ற மகளிர்!

பெண்ணின் பெருமையைப் போற்றிய பெருமானார் (ஸல்)

சென்ற இதழ் தொடர்ச்சி...

உறுதிப்படுத்தினார்கள்."

எவருக்கு ஒரு பெண் குழந்தை இருந்து அவளைப் புதைக்காது, இழிவு படுத்தாது அவளை விட ஆண் குழந்தையை மேலாக்காது (அப்பிள்ளையை) வளர்த்து வந்தால் அல்லாஹ் அவனை சுவனத்தில் நுளைவிப்பான்" என பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்:திர்மிதி)

மேலும், "எவருக்கு மூன்று பெண் பிள்ளைகள், அல்லது மூன்று சகோதரிகள், அல்லது இரண்டு பெண் பிள்ளைகள், அல்லது இரண்டு சகோதரிகள் இருந்து, அவர்கள் விடயத்தில் அல்லாஹ்வுக்குப் பயந்து நல்ல முறையில் நடந்து கொண்டால் அவருக்கு சுவனப் பேறு கிடைக்கும்" எனவும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். மனைவியை மதிக்காது வாழ்ந்த வன்நெஞ்சம் கொண்ட வக்கிரப் புத்திக்காரர்களுக்கு "உங்களுள் சிறந்தவர் உங்கள் மனைவியரிடம் சிறந்தவரே, நான் எனது மனைவியரிடம் மிக மேலானவனாக இருக்கின்றேன்" (ஆதாரம்: இப்னு மாஜா) என்று கூறி வீட்டுக்கு வெளியே நல்லவனாக வாழும் முன் தனது மனைவி பிள்ளைகளிடத்தில் சிறந்தவனாக இருக்கப் பணித்தார்கள். மேலும் இறைத்தூதர் அவர்கள்:"பெண் தனது கணவனின் வீட்டையும், அவனது பிள்ளைகளையும் பராமரிக்கும் பொறுப்புடையவளாக உள்ளாள்" (ஆதாரம்: புஹாரி) என்று கூறி வீட்டில் அவளுக்கு இருக்க வேண்டிய ஆளுமையையும் பொறுப்பையும் எடுத்துக்காட்டினார்கள்.

நாளைய சமூகத்தைக் கட்டியெழுப்பும் உயரிய தகுதித் தகைமையில் பெண்ணுக்கு கணிசமான பங்களிப்பு இருப்பதாலும், தனது கடமைகளை சரியான முறையில் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அவளுக்கு இருப்பதாலும் அவள் அறிவைப் பெற வேண்டியது அவசியமாகும். இது அவளது உரிமை என்பதை நபியவர்கள் வலியுறுத்தினார்கள்.

தொழுகையை நிறைவேற்ற பள்ளிவாசலுக்குச் செல்லும் பெண்ணைத் தடுக்கக்கூடாதென்று கட்டளையிட்டதுடன் அவர்களுக்காக தனது பள்ளியில் ஒரு வாயிலையும் ஒதுக்கினார்கள். எனவே, வணக்கத்தை நிறைவேற்றச் சென்ற அவர்கள் அறிவையும் பெற்று வந்தனர்.

இவையனைத்துக்கும் மேலாக அண்ணலார்(ஸல்) அவர்கள் அன்னையர்களுக்கு அளித்த அந்தஸ்தே அலாதியானது. "சுவனம் தாயின் பாதத்தின் கீழ் உள்ளது" என இயம்பினார்கள்.

மேலும் தனக்கேற்ற துணையைத் தேர்வு செய்வதிலும், தொடர்ந்து வாழமுடியாத போது பிரிந்து விடவும் அவளுக்கு பூரண உரிமை இருக்கின்றது என்பதை எடுத்துரைத்தார்கள்.

மேலும் பாதைகளில் கிடக்கின்ற எப்பெருமதியும் அற்ற கற்களைப் போல் இருந்த பெண்களுக்கு பர்தா எனும் பாதுகாப்பக் கவசத்தை அணியப் பணித்து, பேணிப் பாதுகாக்கப்படுகின்ற இரத்தினக் கற்களைப் போல் ஆக்கினார்கள்.

இவையெல்லாம், நபிகளாரின் காலத்துக்கு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கலாம், இன்றைய நவீன நவநாகரிக உலகத்துக்கு சரிப்பட்ட வருமா என்று ஃபெமினிச போர்வையில் இருக்கும் பேதலித்த அறிவுஜீவிகள் கேள்வி எழுப்பலாம்.

சுற்றே சிந்தியுங்கள்! உங்களிடம் உள்ள அரிய இரத்தினக்கற்களை பாதையில் அப்படியே விட்டுவைப்பீர்களா, அல்லது அதற்குரிய மதிப்பை வழங்கி கவுரவிப்பீர்களா? மதிப்பைப் பொறுத்த எடை போட வேண்டிய அவற்றை காலமாற்றத்தைக் காரணம் காட்டி தரம் தாழ்த்த நினைத்தால் அது மலிந்துபோன மனிதசமூகத்தின் மாபெரும் தோல்வியே அன்றி இரத்தினக்கற்களின் உன்னத அந்தஸ்துக்கு மதிப்பிழுப்பல்ல! இவ்வாறு இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மூலம் பெண்கள் பெற்ற மகிமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். பெண்ணினம் இவற்றைக் கற்று பெருமையைப் பெற்றுக் கொள்ள வேண்டாமா! ஒருபுறம் பெண்ணினம் தனது அளுமை, தகைமை ஆகியவற்றை உள்ளடக்கிய மதிப்பச்சத்துக்கு பெருமை சேர்க்க வேண்டும். மறுபுறம் பெண்ணை போகப் பொருளாகவும், விளம்பர வினயமாகவும் பயன்படத்தும் சமூகத்தின் விபரீத புத்திக்கு சாவுமணி அடிக்கப்பட வேண்டும். அதற்குரிய ஒரே வழிமுறை அண்ணலார் (ஸல்) அவர்கள் அறிவுறுத்திய பெண்வாழ்வு முறையே அன்றி மனித சமூகம் தானே வடித்து வைத்திருக்கும் போலிப் பண்பாட்டுப் பழக்கமல்ல!

■



*தீட்சண்யமுள்ள பார்வையுள்ளவளே ஒரு சமுதாயத்தின் செல்வம். பணமோ பொன் வெள்ளியோ அல்ல!*

எழுத்து



ஃபர்ஸானா ஃரபீக்



# ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்!

மனித மனங்கள் ஒன்றுடன் ஒன்று பிணைந்து நிற்பதற்கும் அதனடிப்படையில் செயல்படுவதற்கும் உறைவிடங்களாய் இருப்பவை நற்குணங்களே! அவற்றை மனித உள்ளங்களில் விதைப்பதன் மூலமே உண்மை அன்பும் அழகிய தகைமையும் அறுவடை செய்ய முடியும். ஆனால், அவை மனித மனங்களை விட்டு தூரப்படும்போது, அமைதி நிலவச் செய்யும் அன்பு அகற்றப்பட்டு, துர்க்குணங்கள் நிறைந்த வன்தரையாகிவிடுகின்றன, மனித மனங்கள்! இறுதியில் அத்துர்குணங்கள் எனும் அமிலக் கரையான்கள் அம்மனங்களை அரித்து - அழித்துவிடுகின்றன.வசந்தம்நிறைந்த வாழ்வியலின் அடிப்படைகள்கூட இதற்கு விதிவிலக்கல்ல!

இக்கோணத்தில் சிந்திப்பின், மனிதமனங்களை விரிசல்களாக்குவதில் முன்னிலை பெறும் துர்க்குணங்களில் புறமும் ஒன்று! தனது சகோதரனிடம் உள்ள ஒன்றை அல்லது அவன் செய்த செயலை அவன் இல்லாத வேலையில் பிறரிடம் எடுத்துரைப்பதே 'புறம்' எனும் இத்தீமையின் வரைவிலக்கணம் ஆகும்! அவனிடம் இல்லாத ஒன்றை அல்லது செய்யாத செயலை அவன் மேல் ஏற்றிச் சொல்வது 'அவதூறு' ஆகும்!

இன்றைய சமூகத்தில் புறம் பேசுதல், கோள் மூட்டுதல் ஆகியன எந்த அளவுக்கு அசாதாரணமான விஷயம் ஆகிவிட்டதெனில் மனிதன் அதற்காக தனது நாக்கைப் பயன்படுத்துவதில் எந்தவொரு தயக்கமோ, வெட்கமோ காட்டுவதில்லை!"புறம் பேசும் புற்று நோய்" வீட்டையோ நாட்டையோ விட்டுவைக்கவில்லை!

இறைவன் மனிதனுக்கு வழங்கியுள்ள ஒரு மாபெரும் கொடை 'நாக்கு'! சற்று சிந்தியுங்கள் நாக்கில்லாத வாயை! வார்த்தைப் பரிமாற்றங்களோ, மொழி முத்திரைகளோ இல்லாத வழக்காடல்களை! ஊமை கண்ட கனவாய் அந்த மனித வாழ்வு இனிக்குமா?

அந்தோ, பரிதாபம்! இத்தகைய ஒரு அத்தியாவசியமான அபூர்வ அருட்கொடையை எப்படி பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று நம்மில் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எலும்பில்லாமல் புரளும் இந்த சிறு மாமிசத் துண்டு எத்துணை மனங்களைக் குத்துகிறது. தானும் குத்துப்படுகிறது! நாக்கின் விபரீதங்களில் அபாயகரமான ஒரு விளைவே "புறம் கூறுதல்".

சற்று சிந்தியுங்கள்! உங்களைப் பற்றி அல்லது உங்களுடைய ஏதெனுமொரு செயலைக் குறித்து உங்கள் நண்பர் நீங்கள் இல்லாத வேளையில் மற்றவரிடம் கூறுகிறார். அதையறிந்து உங்கள் மனநிலை எப்படி இருக்கும்? இப்படி என்னை முதுகில் குத்திவிட்டானே! சிறிதும் மனசாட்சி இல்லையா இவனுக்கு...! என்று முகாரி ராகமல்லவா பாடிக்கொண்டிருப்பீர்...! இதனையே கொஞ்சம் எதிர்திருப்பமாக சிந்தியுங்கள்! உங்களால் புறங்கூறப்பட்ட மனிதரின் மனமும் இப்படித்தானே சோகப்படும்?

இதன் முக்கிய திருப்பமாக பலப்படுத்தப்பட்ட உன்னத உறவுகளில் பலவீனப் பாதகன் தலைகாட்ட ஆரம்பித்து விடுகின்றான். முதலில் முறைத்தல், பின்னர் பேச்சு குறைப்பு, இறுதியில் உறவே உளைச்சலாகி துண்டிப்பு என்று அபாயகரமான விளைவுகள் தவிர்க்க முடியாததாகிப் போகின்றன!

மனித உறவுகளை சிறிது சிறிதாக அரித்து அழிக்கும் இந்தப் புற்றுநோய் குறித்து எவருமே எத்தி வைக்காத எச்சரிக்கையை இறைவன் கண்டிப்புடன் முன்வைக்கிறான். அவனது இறுதி இறைவேதம் கோள் பேசி புறம் பேசித் திரியும் ஒவ்வொருவருக்கும் கேடு உண்டாகட்டும் என்று இழித்துப் பேசுகின்றது.

எச்சரிக்கைக்குப் பிறகு, மனித உணர்வுகள் அருவருத்து வெட்கிப்போகக் கூடிய உவமையை எம்மிலிருந்தே உருவாக்கி புறம் பேசுதலின் அபாயத்தை எம் நாடி நரம்புகள் உணர்ந்து உமிழ்ந்து போகும்படி செய்கிறான் எல்லாம் வல்ல அந்த உவமை நாயகன்:-

...இன்னும் உங்களில் ஒருவர் மற்றவரைப் பற்றி புறம் பேச வேண்டாம். உங்களில் எவரேனும் இறந்துவிட்ட தன் சகோதரரின் இறைச்சியை உண்ண விரும்புவாரா, என்ன? பாருங்கள், நீங்களே அதனை அருவருப்பாய் கருதுகின்றீர்கள்!...

(திருக்குர்ஆன் 49:12)

எழுத்துக்களாய் வடிக்கப்பட்ட இந்த இறைவேத உவமை கேட்பதற்கே அருவருப்பாய் இருக்கும்போது, உண்மையில் எப்படி இருக்கும்? எனவே, புறம் பேசும் முன் ஒவ்வொரு மனிதரும் இந்த உவமையை மனத்தில் நிலைத்துக் கொண்டால், நிச்சயமாக அந்தப் பாவத்தை உமிழ்வதிலிருந்து தன் நாக்கை காத்துக் கொள்வது நிச்சயம்!.

பின்னர், ஏன் மனிதர்கள் இந்தப் பாவத்தின் விபரீதத்தை உணர்வதில்லை? இதற்குரிய காரணங்களைப் பின்வருமாறு நோக்கலாம்!

முதலில், புறங்கூறுபவர் அதனை ஒரு பாவமாகவே நினைப்பதில்லை. அடுத்து, வெளிப்படையான பாவங்களுக்குத் தரக்கூடிய அச்ச உணர்வை இத்தது மறைமுக பாவங்களுக்கும் உரித்தாக்குவதில்லை. மற்றது, பாவங்கள் குறித்த அளவுகோல்களையும், தரங்களையும், வகைகளையும் பொருட்படுத்துவதில்லை!

எழுத்து



ஆயிஷா
∴பாலிஹா
∴பாரூக்

பாவங்கள் இரு வகைகளாகக் கொள்ளலாம் ஒன்று அடியானுக்கும் படைத்த இரட்சகனுக்கும் இடையிலான உறவு முறையில் செய்யப்படுகின்ற பாவம்! இரண்டாவது இரட்சகன் படைத்த அடியார்களுக்கடையிலான பரஸ்பர உறவு முறைகளில் ஏற்படுத்தப்படுகின்ற பாவங்கள்!

முதல்வகையை இறைவன் நாடினால் மன்னித்துவிடுவான்! ஆனால், இரண்டாவது வகையில், பாவமிழைக்கப்பட்டு அநீதிக்குள்ளாக்கப்பட்ட அடியான் மன்னித்தால் மட்டுமே பாவமிழைத்த அடியானுடைய விஷயத்தில் இறைமன்னிப்புக்கு சாத்தியமுண்டு! அனைத்துக்கும் மேலான ஆதி இறைவனாகிய அந்த இரட்சகனையும் மீறி அடியானின் மன்னிப்பே உயர்ந்தது என்பதல்ல இதற்கு பொருள். மாறாக, அநீதிக்குள்ளாக்கப்பட்ட அடியானுடைய தரப்பிலிருந்து மன்னிப்பு பற்றிய கோட்பாடு கருத்திற் கொள்ளப்படாவிட்டால், அது இறைவன் பாவமிழைக்கப்பட்ட அடியானுக்கு செய்யும் அநீதியாகிவிடுமே! (இவ்வாறு எண்ணம் கொள்வதிலிருந்து இறைவன் எம்மைக் காப்பானாக!) இறைவன் நடுநிலையாளன் நீதியின் நாயகன்!

எனவே, பாவமிழைக்கப்பட்ட - புறங்கூறப்பட்ட மனிதனிடம் சென்று தன் குற்றத்துக்க மன்னிப்புக் கேட்டு மறுபடியும் அதனை திருப்பி செய்யாதவரே பாவமன்னிப்புக்குரிய வராவார். அவ்வாறு செய்யாவிடின், எவரும் எவருக்காகவும் பரிந்துரை செய்ய முடியாத அந்த மறுமை நாளில், நாம் பாதுகாப்பும் பெறுவதற்கு உதவக்கூடிய - சுவனத்தைப் பெற துணைபோகக்கூடிய ஒரு சிறு நற்செயலும்கூட நம்மால் பாவமிழைக்கப்பட்டவர் கணக்கில் எழுதப்பட்டு, அவருடைய பாவங்கள் நம் கணக்கில் வரவு வைக்கப்பட்டு விடலாம்.

எண்ணிப்பாருங்கள்! அப்போது எனது இயலாமையை...! அத்தகைய துர்ப்பாக்கிய நிலை எமக்குத் தேவையா?

இறுதியாக, புறம் பேசுவதிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் குறைந்தபட்ச முயற்சியாக உமர் (ரலி) அவர்களின் நயமான கடிந்துரையை பின்பற்றலாம். அவர் கூறினார்:

ஏதேனும் நல்லவற்றை உங்களால்
செய்ய இயலவில்லையெனில்,
குறைந்தபட்சம் அமைதியாக
இருந்துவிடுங்கள்!.

Dr. ஜாகிர் நாயக் பேட்டி

# கேள்வித் தூரிகைகளுக்கு அழகு பதில் ஓவியங்கள்!



*உலகப்புகழ் பெற்ற இஸ்லாமிய நாவலர் டாக்டர் ஸாகிர் நாயக் அவர்கள் தனது குவைத் விஜயத்தின் ஆரம்பமாக 28-02-2008 பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டார். அவரின் அறிவுப்பாறைகளில் மோதியபோது சிதறித்தெறித்த துகள்களை பொக்கிஷங்களாய்ப் பொறுக்கி பொன்னிற வரிகளில் புடம் போடப்படுகின்றது, வசந்தம் வாசகர்களுக்காக..!*

கேள்வி:

*உங்களை ஷேக் அஹ்மத் தீதாத் அவர்களுடைய மாணவர் என்கிறார்களே? அவருடைய அழைப்புப் பணி உடைய பாணி மிகக் கடினமானதாக இருந்தது என்று குற்றம் சாட்டப்படுகின்றதே??*

டாக்டர் நாயக்:

1997 இல் முதன் முதலாக அவரை சந்தித்தேன். அப்போது தான் தென் ஆபிரிக்காவில் கிறிஸ்த்துவர் மத்தியில் அழைப்புப் பணி செய்வதால் கிறிஸ்த்துவரின் மீது மட்டும் அதிக அளவு ஆய்வு செய்வதாகவும் நான் அப்படியல்லாமல் இந்தியாவின் அனைத்து மதத்தாரிடையே அழைப்புப்பணி செய்ய வேண்டும்.அதற்காக அனைத்து மதங்கள் குறித்த ஒப்பாய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.அன்றிலிருந்து என் பணிஆரம்பித்தது.அவருடைய பிரச்சார உத்தியைப் பொருத்தவரை சாத்தானை விரட்ட புனித நீர் ---அல்லது நெருப்பு ---தேவை என்பது கிறித்துவர்களின் நம்பிக்கை. ஆதில் ஷேக் அவர்கள் நெருப்பைப் பயன் படுத்திக்கொண்டார். சுரி தானே

கேள்வி:

*அழைப்புப்பணிக்காக உங்கள் படிநிலை என்ன?*

டாக்டர் நாயக்:

என்னைப் பொறுத்தவரைக்கும் *வேதம் அருளப்பட்டவர்களே! எங்களுக்கும் உங்களுக்கும் இடையிலுள்ள பொதுவான ஒரு விஷயத்தின் பக்கம் வாருங்கள், "அல்லாஹ்வைத் தவிர யாருக்கும் நாம் அடிபணிய மாட்டோம். அவனோடு எதனையும் எவரையும் இணையாக்க மாட்டோம் மேலும், நம்மில் எவரும் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் இறைவனாய் ஆக்கிக் கொள்ளக் கூடாது!..* எனும் திருக்குர்ஆன் 3:64 வசனத்தை அடிப்படையாகக் கொண்டு நம்மைப் படைத்த அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்குவோம் எனும் அடிப்படைக் கொள்கையை மட்டும் பின்பற்றினால் போதுமானது. பிற விஷயங்கள் நடக்க அல்லாஹ் போதுமானவன்.

கேள்வி:

*டென்மார்க் கார்டூன் சர்ச்சை பற்றி......*

டாக்டர் நாயக்:

என்னைப் பொறுத்த வரை முஸ்லிம் சமூகத்தில் நான் கண்ட ஒரு பெரும் குறை இது தான். இஸ்லாத்தின் மீதோ அல்லது நம் பெருமானார் முஹம்மத் (ஸல்)அவர்கள் மீதோ ஏதேனும் அவதுாறுகள் வீசப்படும் போது ஒட்டுமொத்த சமூகமும் அந்த ஒரு விடயம் பக்கமே கவனம் செலுத்த ஆரம்பித்து ஏனையவற்றை மறந்து விடுகின்றார்கள்.அப்படியல்லாமல் முஸ்லிம் சமூகத்தில் ஒரு அறிவுஜீவிக்குழு சர்வதேச அளவில் உருவாக்கப்பட வேண்டும்.பெரும் வழக்கறிஞர்கள் மற்றும் தத்துவ ஞானிகளைக்கொண்ட இக்குழு சர்வதேச நீதிமன்றத்தில் இது பற்றி வழக்காட வேண்டும். (ஆ-ர்)

அஞ்சா நெஞ்சுக்கு அரிமாவும் ஆடாகவே தோன்றும். நீ அச்சமற்றவனாயின் கடலே ஒரு கிறந்த சமவெளிதான். நீ அஞ்சினாலோ ஒவ்வொரு அலையிலும் ஒரு சுறாமீனுண்டு.

# நூலால் வந்தது.....! சங்கிலியால் போனது...!!

ஓர் ஊரில் ஏழை மீனவன் இருந்தான். கடற்கரைக்கு அருகில் ஒரு ஓட்டை குடிசை வீடு. கடலுக்கு அருகில் உள்ள பாறைகளில் மீது அமர்ந்து தூண்டில் போட்டு மீன் பிடித்து, விற்று வாழ்க்கை நடத்தி வந்தான். அத்தகைய ஏழ்மை நிலையிலும் இறையச்சமிக்க அடியானாக இருந்த அவன் மீன் பிடிக்க செல்ல மறந்தாலும் ஒரே இறைவனை தொழ மறப்பதில்லை.

ஒரு நாள் மீன் பிடிக்க தூண்டிலைப் போட்ட போது தூண்டில் எங்கோ கற்பாறையில் சிக்கிவிட்டது. எவ்வளவு முயன்றும் எடுக்க முடியவில்லை. அறுந்து போய் விடும் நிலை. என்ன செய்வது? இறைவனை எண்ணியவாறு மெதுவாக தண்ணீரில் இறங்கி கடினப்பட்டு தூண்டிலை இழுத்தான். அது ஒரு பெரிய பெட்டியில் சிக்கியிருந்தது. பிறகு பெட்டியைக் கரையில்இழுத்து வந்து பார்த்தால் அத்தனையும் தங்கம்.புகழனைத்தும் இறைவனுக்கே என்று உரத்த குரலில் இறைவனுக்கு நன்றி செலுத்தினான்.

தங்கம் பணமாக மாறியது. தூண்டில் போய் பெரிய மீன்பிடி மோட்டார் படகுகள் வந்தன. இப்போது அவன் சாதாரண மீனவன் அல்ல....! ஆயிரக்கணக்கான மீனவர்களுக்கு வாழ்வு தரும் மீனவ முதலாளி. ஆனால் கடவுள் எனும் தனது முதலாளியை அவன் மறக்க ஆரம்பித்தான். தொழுகைகள் எப்போதாவது என்றாகி காலப்போக்கில் நினைவிலிருந்தே போயின. இறையச்சம் சிறிது சிறிதாகி குறைந்து சுத்தமாக போய்விட்டது.

ஒரு நாள் கடலில் பெரும்புயல் ..அவனது படகுகள் கப்பல்கள் இருந்த இடம் தெரியாமல் அடித்து போய்விட்டன. மாளிகைக் கதவுகள் காணோம். முதலீடுகள் அனைத்தும் ஒரே நொடியில் முடங்கிப்போயின.

புயலின் வேகம் தணியும் வேளை சங்கிலியில் கட்டியிருந்த அவனுடைய கடைசிப்படகும் அடித்துப் போனது. திரும்பிப் பார்த்தால் அவன் பழைய மீனவனாக...!

அப்போது தான் உணர்ந்தான்: 'இறைவா! ஒரு மெல்லிய நூலின் மூலம் எனக்கு செல்வம் தந்தாய். இன்று சங்கிலிகளால் கட்டிப் போட்டும் கூட உன் வல்லமையால் அவை அடித்துப்போய் விட்டன உன் வலிமையே வலிமை.

நீ தர நாடினால் எவரும் தடுக்கமுடியாது. நீ தடுப்பதை எவராலும் தர முடியாது!" என்று கூறியவனாய் தனது தூண்டிலுடன் பழைய மீனவ வாழ்க்கைக்குத் தயாரானான்.

-எம்
மூலம் -அப்துல் கரீம்
மன்னார்
இலங்கை.






# எங்கள் வாழ்வை வளம் பெறச் செய்து என்றும் மங்காத இஸ்லாம் என்று சங்கே முழங்கு!

## வசந்தகால வகுப்புக்கள்

மார்ச் முதல் ஜூன் 2008 வரை

IPC மகளிர் பிரிவு - ரவ்தா கிளை

புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய சகோதரிகளுக்காக..!

| நாள் | | பாடம் |
|---|---|---|
| ஞாயிறு | - | திருக் குர்ஆன் பாடம் 4<br>இறைத்தூதர்களின் வரலாறு - பகுதி 1 |
| திங்கள் | - | தூய்மையும் தொழுகையும் - ஆரம்பப் பாடம் |
| செவ்வாய் | - | இறைத்தூதர்களின் வரலாறு - பகுதி 4 |
| புதன் | - | திருக் குர்ஆன் பாடம் 2<br>இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) வாழ்க்கை வரலாறு - பகுதி 1 |
| வியாழன் | - | திருக் குர்ஆன் பாடம் 1<br>இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகள் |
| வெள்ளி | - | ஓய்வு |

## சமுதாயத்தின் கண்களான பெண்களே!
## உங்கள் பார்வைகளை அறிவொளி ஆக்கிக்கொள்ளுங்கள்!!

### தமிழ் வழி மார்க்க வகுப்புக்கள்!


(அனைத்து மகளிருக்கும் பொதுவானது)

பிரதி சனிக்கிழமைதோறும்

இடம் : கேதான் அத்தஃஜ் பள்ளிவாயில்
(பெண்கள் பகுதி)
(பெரிய ஜம்இய்யாவிற்கு எதிரில்)

நேரம் : பிற்பகல் 4.30 முதல் மாலை 6.30 வரை

பாடங்கள் : முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு
திருக் குர்ஆன் விளக்கம்



IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
رحمة للعالمين...
Extn: 208 2444117
www.ipc-kw.c

வாழ்க்கை ஒரு நடனமல்ல, உங்களின் இசைக்கு இணங்குவதற்கு!

வாழ்க்கை ஒரு இசையுமல்ல, உங்களின் ராகத்திற்கு தாளம் போடுவதற்கு!

அதையும் தாண்டி.

சுகங்களை சோகங்களாக்காமல். இருமைகளையும் வெறுமையாக்காமல்.

இலட்சிய இமயம் தொட்டு வாழும் ஒரு சிகரம்!




அத்தகைய வாழ்வை வெற்றிகரமாக்க

**இஸ்லாமிய நிலையம்**

**குவைத்**




IPC

لجنة التعريف بالإسلام

ISLAM PRESENTATION COMMITTEE

جمعية النجاة الخيرية

...رحمة للعالمين

Extn: 208 2444117

www.ipc-kw.com